
**Laodicean Times**

# லவோதிக்கேயன் டைம்ஸ்

1916 - 1879 ரீ - பிரிண்ட்ஸ் தமிழாக்கம்

தொகுப்பு 12 தொகுதி 1 ஜனவரி - மார்ச் 2022



R 5478

## வானத்திலிருந்து உண்டான சத்தம்

## THE VOICE FROM HEAVEN

"என் ஜனங்களே, நீங்கள் அவளுடைய பாவங்களுக்கு உடன்படாமலும், அவருக்கு நேரிடும் வாதைகளில் அகப்படாமலும் இருக்கும்படிக்கு அவளைவிட்டு வெளியே வாருங்கள்" – வெளிப்படுத்தல் 18:4

நம் பாடத்தின் ஆதார வசனம், சொல்லர்த்தமான பாபிலோன் நகரத்தைக் குறிக்காமல், வெளிப்படுத்தல் புத்தகத்தில் விவரிக்கப்பட்டுள்ள அடையாளமான பாபிலோன் நகரத்தைக் குறிக்கின்றது என்பதை மேலே உள்ள வேத வாக்கியத்தின் அமைப்பானது காண்பிக்கிறது. பாபிலோன் என்கிற பதமானது, போலி சபை அமைப்புகளில் உள்ள பல்வேறு தப்பறைகளின் ஒருமுக சிந்தையைக் குறிக்கின்றது. அது வெளிப்படுத்தலில் "தாய் மற்றும் சேய்கள்" என உருவகப்படுத்தப்பட்டுள்ளது. இதன் ஆதி அமைப்புக்கு கர்த்தரால் வழங்கப்பட்ட நாமம் "மகா பாபிலோன், வேசிகளுக்கு தாய்" என்பதாகும். இவ்வாறு இந்த நாமம் முழு (குடும்ப) அமைப்புமே வார்த்தையின் ஒவ்வொரு அர்த்தத்திலும் சட்டவிரோதமானது என்பதைத் தெரிவிக்கின்றது. அவள் பரலோக மணவாளனைப் புறக்கணித்துவிட்டு, உலகத்தை வெறி கொள்ளச்செய்யும் உணர்வை மழுங்கடிக்கும் பானத்தை தனது "பாத்திரத்தில்" கலந்திருந்தாள். இதைக்கண்டு கர்த்தருடைய பரிசுத்தவான்களும்கூட திகைத்தார்கள் – வெளிப் 17:1–6.

அப்போஸ்தலர்கள் "நித்திரையடைந்த" பிறகு, தேவனுடைய பிள்ளைகள் உபதேசம் மற்றும் நடைமுறைகளில் தப்பறையினால் மெல்ல மெல்ல அடித்துச்செல்லப்பட்டனர். இது இருண்ட யுகங்களில் அதன் உச்சகட்டத்தை அடைந்தது. மாபெரும் அமைப்பொன்று வளர்ச்சியடைந்து, குழப்பம் மற்றும் அந்தகாரத்திற்கு இட்டுச்சென்றது. இவ்வளவு நூற்றாண்டுகளில், இந்த அமைப்புடன் இணைக்கப்பட்டிருந்த ஒவ்வொருவரும் மாய்மாலக்காரர்களோவென்று நாம் நினைக்க வேண்டியதில்லை. மாம்சீக இஸ்ரயேல் ஜனங்கள் உண்மையில் நேரடி அர்த்தமுள்ள பாபிலோனுக்குச் சிறைப்பட்டுப் போனதைப்போல, தங்கள் மத்தியில் சில உண்மையான கர்த்தருடைய பரிசுத்தவான்களைக் கொண்டிருக்கும் ஆவிக்குரிய இஸ்ரயேல் ஜனங்களும்கூட, ஆவிக்குரிய பாபிலோனுக்குச் சிறைப்பட்டுப் போயிருக்கின்றனர். இவர்களில் சிலர் விடுதலைபெற விரும்பினாலும், இதில் சிலருக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை.

நாம் சீர்திருத்தக் காலப்பகுதிக்கு வருகையில், பாபிலோனிலிருந்தும், அதன் தப்பறைகளிலிருந்தும் முற்றிலும் விடுபடுவதற்குப் பதிலாக, பின்னர் உருவான பல்வேறு அமைப்புகளோ, தாங்கள் பிரிந்துவந்த தாய் அமைப்பின் ஆவியை கணிசமான அளவினைப் பெற்றிருக்கவே செய்தார்கள் என்பதாகக் காண்கிறோம். "தாயிடம்" வெளிப்பட்ட அதே உபத்திரவப்படுத்தும் உணர்வானது, ஓரளவு சேய்களிலும் வெளிப்பட்டு வந்திருக்கின்றது. அடிமைப்படுத்தும் சக்தியானது, இடைக்காலத்திலிருந்து(medieval times), சீர்திருத்தத்தின் காலம் வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. எனவே இன்றைய கிறிஸ்தவ உலகம் என்றழைக்கப்படுவதைப் பார்க்கையில்,

### இம்மாத வெளியீட்டில்

.. **வானத்திலிருந்து உண்டான சத்தம்** ... *1*

.. **ஜெபத்தில் ஊக்கமாயும், விழிப்பாயுமிருத்தல்** ... *8*

.. ***கீழ்ப்படிகிற பிள்ளைகளாக வடிவமைத்தல்*** ... *14*

*லவோதிக்கேயன் டைம்ஸ் தேவனுடைய வார்த்தையின் ஐசுவரியங்களை லவோதிக்கேய தூதனின் படைப்பான ரீ–பிரிண்ட்ஸின் தமிழாக்கம் வாயிலாக புரிந்துகொள்ளத்தூண்டுவதில் சகோதரர்களுக்கான ஊழியமாக வெளியிடப்படுகிறது. தொடர்புக்கு – தமிழ்நாடு வேத மாணவர்கள், M- 1043 ஹவுசிங் யூனிட், கணபதி மாநகர், கணபதி, கோயம்புத்தூர் – 6. செல் : 9344 144000*

தற்போதுள்ள நிலைமைகளைச் சித்தரிக்க, குழப்பம்(confusion) என்கிற வார்த்தையைப் பார்க்கிலும் வேறொரு சிறந்த வார்த்தையைப் பயன்படுத்திட முடியாது என்று காண்கிறோம்.

இந்த பாபிலோனிய அமைப்பில் தேவனுடைய உண்மையான பிள்ளைகள் இன்னும் இருக்கிறார்கள். ஆனால் பிரித்தெடுக்கப்படும் காலத்தில் நாம் இருக்கிறோம். பாபிலோனில் இன்னும் எஞ்சியுள்ளவர்கள் விரைந்து வெளிவரவேண்டும். தேவனுடைய பிள்ளைகளில் சிலர், இந்த யுகம் முழுவதும் பாபிலோனில் இருந்திருக்கிறார்கள் என்கிற உண்மையானது, தேவன் ஏன் பாபிலோன்மீது சற்று அக்கறை வைத்திருந்தார் என்பதை நமக்குக் காட்டுகிறது. அவருடைய பரிசுத்தவான்கள் பல நூற்றாண்டுகளாக அங்கு கிட்டத்தட்ட அடிமைகளாக இருந்திருக்கின்றனர். தேவன் பாபிலோனுடன் எவ்வகையிலும் அல்லது எந்த அளவிலும் கையாள்வதற்கு இதுவே காரணமாகிறது.

### பாபிலோன் சமுத்திரத்தில் எறியப்படுதல்

தற்போதைய யுகத்தின் முடிவில் தேவன் பாபிலோனை முற்றிலுமாக நிராகரிக்கும் ஒரு காலம் வரவிருக்கின்றது என்பது பற்றிய ஒரு தீர்க்கதரிசனமாக, நமது ஆதார வசனத்தின் அமைப்பு உள்ளது. இந்தக் காலத்தைப் பற்றி வெளிப்படுத்தலில் நமக்குக் கொடுக்கப்பட்டுள்ள காட்சியில், அமைப்புக்களை கர்த்தர் நிராகரிக்கும் காரியமானது, ''பாபிலோன் விழுந்தது! விழுந்தது!'' என்ற வார்த்தைகளில் அறிவிக்கப்பட்டுள்ளது. அவர் வாயினின்று அவளை வாந்திபண்ணினபடியால், சர்வ வல்லமையுள்ளவர் இப்போது தம்முடைய உண்மையான ஜனங்களை, ''அவளைவிட்டு வெளியே வாருங்கள்'' என்றழைக்கிறார். இந்த அறுவடைக் காலத்தில், உண்மையுள்ளவர்கள் பாபிலோனிலிருந்து தங்களை விடுவித்துக் கொண்டுவருகிறார்கள். பிரிக்கும் வேலையானது கிட்டத்தட்ட முடிவுக்கு வந்துவிட்டது. விரைவில், வேத வாக்கியத்தில் சித்தரிக்கப்பட்டுள்ளபடி, அராஜகத்தின் ''சமுத்திரம்'' போலி அமைப்புக்களை விழுங்கவிருக்கிறது. பாபிலோன் ''பெரிய எந்திரக்கல்லைப்போல் சமுத்திரத்தில் எறியப்பட'' இருக்கிறது(சங்கீதம் 46:2; எரேமியா51:62–64; வெளிப்18:21). இந்த தீர்க்கதரிசனங்கள் மிக விரைவில் எதிர்காலத்தில் நிறைவேறுமென்று நாங்கள் நம்புகிறோம்.

பெயரளவிலான சபையானது, இனி ஒருபோதும் ஒரு தனித்துவமான நிலையில் – உலகத்திற்கு மேலாக நிற்பதில்லை. அவளுடைய சில ஊழியக்காரர்கள் தாங்கள் இயேசுவை உலக இரட்சகர் என்று நம்புவதில்லை என்று அறிவிக்கிறார்கள். மனிதனே அவனுடைய சொந்த இரட்சகன் என்று அவர்கள் கூறுகிறார்கள். மனுக்குலத்தின் சமூக எழுச்சியை அவர்கள் நம்புகிறார்கள். இந்த எழுச்சியானது அவர்களின் பார்வையின்படி, சரியான மனிதர்களைச் சரியான இடத்தில் வைப்பதன் மூலமும், பெண்ணுக்கு உரிமையை வழங்குவதன் மூலமும் மற்றும் பிற சமூக சீர்திருத்த முறைகளின் மூலமும் வர வேண்டுமென்கிறார்கள். என்ன ஒரு வருந்தத்தக்க நம்பிக்கை!

இப்போது சபைகளிலிருந்து வெளியேவரும்படி அவருடைய ஜனங்களை அழைக்கும் தேவனுடைய சத்தத்தை நாம் எவ்வாறு அடையாளம் காணலாம்? எந்த விதத்தில் நாம் அவருடைய சத்தத்தைக் கேட்போம்? என்று சிலர் கேட்கலாம். எல்லா பாவங்களிலிருந்தும் மற்றும் பாவ நிலைமைகளிலிருந்தும் தங்களைப் பிரித்துக் கொள்ளும்படிக்குத் தேவன் தம்முடைய ஜனங்களுக்குக் கட்டளையிடுகிறார் என்று நாங்கள் பதிலளிக்கிறோம். நம்முடைய முன்னோர்கள் இந்தச் சத்தத்தைக் கேட்கவில்லை, பாவத்தின் இந்த நிலையைப் பார்க்கவுமில்லை. அந்த சத்தம் அப்போது உண்டாயிருக்கவில்லை. சீர்திருத்தக் காலத்தில்கூட இந்த தப்பறையின் சிக்கல்கள் தெளிவாகக் கண்டறியப்–படவில்லை. ஆனால் இப்போது, இந்த அறுவடைக் காலத்தின்போது, பெயரளவிலான சபைகளின் போதனைகள் முற்றிலும் தப்பறையானவை – தெய்வீக நோக்கத்தையும், தெய்வீக குணாதிசயத்தையும் முற்றிலும் தவறாகச் சித்தரித்துள்ளன என்பதை நம்மால் மிகத் தெளிவாகக் காணமுடிகிறது. பாபிலோனானது உபதேச தப்பறைகளாலும், சீரழிவுகளாலும் நிரம்பியுள்ளதையும், உலகத்தின் ஆவியால் நிரம்பியுள்ளதையும் நம்மால் இப்போது உணரமுடிகிறது.

### அறிவு பொறுப்பையும் கொண்டுவருகிறது

மேலும், தேவனுடைய திட்டத்தின் காலங்களும் வேளைகளும் இப்போது தெளிவாக்கப்பட்டுள்ளன. இந்தத் தப்பறையான அமைப்புகள் கர்த்தரால் நிராகரிக்கப்படுமென்று முன்னறிவிக்கப்பட்ட காலத்தில் நாம் இப்போது வாழ்ந்துகொண்டிருக்கிறோம் என்று நமக்குக் காண்பிக்கப்பட்டுள்ளது. இவைகளையெல்லாம் நாம் காணும்போது, நாம் இந்த அமைப்புகளை விட்டு வெளியே வரவேண்டாமா? ''அவளைவிட்டு வெளியே வாருங்கள்'' என்ற தேவனுடைய சத்தம் இதுவே. இச்சத்தம்

இப்போது பேசுவதை நாம் கேட்கிறோம். வெளிப்படுத்தலின் இந்த தீர்க்கதரிசனமானது இப்போது நிறைவேறி வருகிறதைக் காண்கிறோம். ஆனால் , ஆண்டவரே, பாபிலோனில் எங்களுக்குப் பல மதிப்புமிக்க நண்பர்கள் உள்ளனர். அவர்களை அங்கு விட்டுவிட எங்களுக்கு மனமில்லை. பாபிலோன் என்றால் என்ன என்பதைக் காட்ட நாங்கள் முயற்சித்தோம். ஆனால் அவர்கள் செவிசாய்க்க மாட்டார்கள். இவர்களையெல்லாம் விட்டுவிட்டு இவர்களுக்கு எதிரான நிலைப்பாட்டை எடுப்பது எங்களுக்குப் பேரிழப்பாக இருக்கும். நாங்கள் வெளியே வர வேண்டுமா ? எங்கள் நண்பர்கள் எங்களை பைத்தியக்காரர்கள் என்று நினைப்பார்கள் ! என்று எவரேனும் ஆட்சேபணை தெரிவித்தால், இதற்கு கர்த்தருடைய பதில்: ‘‘அவளைவிட்டு வெளியே வாருங்கள்’’ அல்லது அவளுக்கு நேரிடும் வாதைகளில் அகப்படுங்கள்’’ என்பதாகும்.

இதைக் காணும்வரையில் நீங்கள் அவளுடைய பாவங்களுக்கு பங்காளிகள் அல்ல. நீங்கள் பாபிலோனில் பிறந்தீர்கள், நீங்கள் முன்பு புரிந்துகொள்ளாததற்கு கர்த்தர் உங்களை பொறுப்பேற்கச் செய்வதில்லை. ஆனால் நீங்கள் இப்போது எவ்வளவு நன்றாகப் புரிந்துகொள்கிறீர்களோ, அந்தளவிற்குப் பொறுப்பும் உங்களுக்கு இருக்கின்றது. சத்தியம் எது, அசத்தியம் எது என்பதை நீங்கள் கண்டும், நீங்கள் இன்னும் பாபிலோனிலேயே தங்கி, உங்கள் செல்வாக்கு மற்றும் பணங்களால் அவளுக்கு ஆதரவாக இருந்தால், நீங்கள் மிகவும் குற்றவாளியாக இருப்பீர்கள். கர்த்தருடைய சத்தத்தைக் கேட்கும்போதே நீங்கள் அவளைவிட்டு வெளியேவரத் தவறினால், நீங்கள் அவருக்கு முற்றிலும் உண்மையுள்ளவர்களாக இல்லை என்பதையே அது குறிக்கின்றதாயிருக்கும். நீங்கள் அவருடைய பிள்ளைகளாக இருக்கலாம், ஆனால் பூமிக்குரிய இழப்புக்குப் பயந்து நீங்கள் கர்த்தருக்குக் கீழ்ப்படியத் தவறினால், அது அவருடைய தயவைக் காட்டிலும் இவை உங்களுக்கு மிகவும் விலையுயர்ந்தவை என்பதையே நிரூபிக்கும். மேலும் அவர் மாயக்காரர்களைக் கையாள்வது போல் உங்களையும் கையாள்வார்; அவர்களின் அனுபவங்களில் நீங்களும் ஒரு பங்கினைப் பெறுவீர்கள்.

வாந்திபண்ணிப் போடப்பட்ட அமைப்புகளின் பாவங்களை உயர்த்தி, அவர்களுக்கு உங்கள் செல்வாக்கைக் கொடுப்பதன் மூலம் நீங்கள் அவற்றை அங்கீகரிப்பீர்களென்றால், நீங்கள் நிச்சயமாக பாபிலோனின் வாதைகளில் அகப்படுவீர்கள். இது நியாயமான எச்சரிக்கையாகும். தேவைப்பட்டால், ஒவ்வொரு நெருங்கிய தொடர்புகளையும் விட்டுவிடுவதும், தேவனுக்கு உண்மையாயிருப்பதும், பாபிலோனின் தப்பறைகளிலிருந்தும் பாவங்களிலிருந்தும் விடுபடுவதும் ஒவ்வொரு கிறிஸ்தவரின் கடமையென நாங்கள் புரிந்துகொள்கிறோம். அவளுடைய நியாயத்தீர்ப்புக்கான காலம் வந்தாயிற்று.

பாபிலோனின்மீது வரும் வாதைகள் வேதனையான உபத்திரவங்களாகும். இதன் முடிவில் அரசியல், சமூகம், பொருளாதாரம் மற்றும் மதம் போன்றவற்றின் தற்போதைய ஒழுங்குமுறை முழுமையாகத் தூக்கியெறியப்படும். வெவ்வேறு சீருடைகளின் கீழிருக்கும் அதன் பல்வேறு கட்டங்களிலுள்ள ஒழுங்குமுறைகளானது, ஒரே நோக்கத்தையுடையவை. இவைகளின் ஆர்வங்களனைத்தும் ஒரே மாபெரும் கொள்கையில் ஒன்றுபட்டுள்ளன. பூமியின் பிரபுக்கள், இராஜாக்கள் மற்றும் அவர்களின் ஆதரவாளர்கள் பாபிலோனின் ஒரு மாபெரும் சேனையாக இருப்பார்கள். அதற்கு விரோதமாக திரளான ஜனங்களைக் கொண்டிருக்கும் மற்றொரு பரந்த சேனையிருக்கும், இந்த இரு மாபெரும் படைகளுக்கு இடையிலான மோதல், உலகத்தின் தற்போதைய ஒழுங்குமுறையை அராஜகநிலைக்குள் கொண்டுசெல்லும்.

### தற்கால சத்தியத்தின் சத்தம்

அப்படியானால் தேவ பிள்ளைகளனைவரும் இந்தச் சத்தத்தைக் கேட்டிருக்கிறார்களா ? என்பது ஒரு முக்கியமான கேள்வியாகிறது. அனைவரும் இதுவரை கேட்டிருப்பதாக நாங்கள் நினைக்கவில்லை என்று இதற்கு பதிலளிக்கிறோம். இதனிமித்தமாக, அவருடைய பாவங்களில் பங்கேற்றவர்களாக, ஆனால் அறியாமையினாலும், அறிவில் குறைவுபடுவதனாலும் குழப்பமடைந்த சில கிறிஸ்தவர்கள் இன்னும் பாபிலோனில் இருக்கிறார்கள். நாம் இந்த அழைப்பை ஒரு விசேஷித்த செய்தியாக அறிவிக்கலாமா ? என்று கேள்வி எழலாம். இதற்கு எங்களுடைய பதில்: அது எங்களுடைய கருத்தல்ல. எங்கள் கருத்து என்னவென்றால், இது ஒரு விசேஷித்த செய்தியாக அறிவிக்கப்பட்ட இடங்களில், விளைவு பொதுவாக எந்நோக்கத்திற்காக அறிவிக்கப்பட்டதோ, அதிலிருந்து வேறுபட்டதாக இருந்தது; இது பலரைக் கோபமேற்படுத்துகிறது. நீங்கள் எந்த அதிகாரத்தில் எங்களைப் பாபிலோன் என்றழைக்கிறீர்கள், எந்த அதிகாரத்தால் எங்களை ‘‘வெளியே வாருங்கள்’’ என்று சொல்கிறீர்கள் ? என்று கேட்கிறார்கள்.

கர்த்தரே பாபிலோனிலிருந்து தம்முடைய

ஜனங்களை வெளியே வரவழைப்பவர் என்பது நமது கருத்தாகும். இந்த அழைப்பு குறிப்பாக வானத்திலிருந்து உண்டான ஒரு சத்தமென அங்கீகரிக்கப்படவேண்டும். வானத்திலிருந்து உண்டான இந்த சத்தமென்பது என்ன ? வெளிப்படையாக ஏற்ற கால சத்தியமே இந்த சத்தம். காலங்கள் மற்றும் வேளைகளுடன் வேத வாக்கிய உபதேசங்களுடைய ஒரு விளக்கக்காட்சியே – அந்தச் சத்தமாகும். யுகம் முழுவதும் குழப்பமும் தப்பறையும் இருந்தபோதிலும், சத்தியமானது முன்பைக் காட்டிலும் தெளிவாக இருக்கிற அறுவடைக் காலத்தில் நாம் இப்போது இருக்கிறோம் என்பதைக் காட்டுகிறது. தப்பறைகள் நிறைந்த, குழப்பம் நிறைந்த ஓர் அமைப்பை நாம் ஆதரிக்க வேண்டுமா, வேண்டாமா ? என்பதைப் பற்றி இந்தச் சத்தியத்தின் சத்தமானது நமக்குக் கூறுகின்றது.

அப்படியானால், பாபிலோனிலிருந்து வெளியே வருவதற்கு நாம் எவ்வழியில் தேவனுடைய செய்தியை கொடுக்கவேண்டும் ? நாம் அவர்களுக்கு சத்தியமாகிய வெளிச்சத்தை காண்பிக்கவேண்டும். ஆராய்ச்சிக்கான வாய்ப்பை நாம் அவர்களுக்கு முன் வைக்கவேண்டும். மேலும் இந்த விஷயங்களைத் தாங்களாகவே நிரூபிக்க அவர்களை ஊக்குவிக்கவேண்டும். சத்தியத்தையும் அவர்களிருந்த அடிமைத்தனத்தையும் அவர்கள் காண்கையில், இந்தக் கட்டுக்களை உடைத்துக்கொண்டு கிறிஸ்துவுக்குள் சுதந்திரமாக நிற்பதில் அவர்கள் மகிழ்ச்சியடைவார்கள். பின்னர், சரியான மனப்பான்மையிலிருக்கின்ற கர்த்தருடைய ஜனங்கள் அனைவரும் சுதந்திரமாக நிற்கவேண்டும் என்பதையும், தாங்கள் சபைப் பிரிவுக்குரிய வெறியிலிருந்து வெளியே வரவேண்டும் என்பதையும், தாங்கள் பாபிலோனாக இல்லாமல், மாறாக தேவனுக்கான தங்கள் நிலைப்பாட்டை எடுக்கும்போது, தாங்கள் பாபிலோனுக்குரியவர்கள் என்று உரிமை கோருவதனால், கர்த்தரை தவறாக சித்தரிக்கிறவர்களாக இருக்கக்கூடாது என்பதையும் காண்பிக்கின்ற சத்தமாக இது இருக்கும்.

### சத்தியத்திற்கு உண்மைத்தன்மையோடிருத்தல் எனும் சோதனை

இந்த நிலைப்பாடானது யுகங்களைப் பற்றிய தெய்வீகத் திட்டத்தை, சத்தியத்தை முன்னெடுத்துச் செல்வதைக் குறிக்கும். ஒருவன் பாபிலோனின் உண்மையான தன்மையைப் பார்த்துவிட்டு, பொதுவான வழியில் தன் நடக்கையை உடையவனாயிருந்து அவன் அங்கேயே தரித்திருந்தால், அது சத்தியத்தைச் சமரசம் செய்வதாக மாத்திரமே முடிந்திருக்கும். உலகத்துக்குரிய ஞானியாயிருந்து, சில காலம் அங்கேயே தரித்திருந்து, அவர் பிரபலமடையவும், மனிதர்களின் கனத்தைப் பெறவும் தொடரக்கூடும். ஆனால் சத்தியத்தைப் பார்த்தும், அதைப் புரிந்துகொண்டபிறகும் ஒருவர் பாபிலோனில் தொடர்ந்திருந்தால், அவர் நிச்சயமாக அறிவொளியால் பிரகாசிப்பிக்கப்படாத ஒருவரைக் காட்டிலும் பெரிய பாவியாக இருப்பார்.

சத்தியத்தைப் பிரகடனஞ்செய்வதில் நம்முடைய சொந்தக் கடமையைச் செய்வதைத் தவிர்க்கவேண்டும் என்பதல்ல எங்களது கருத்து. மாறாக, தேவையற்ற விரோதத்தைத் தூண்டுவதைத் தவிர்க்கவேண்டும் என்பதே எங்களது கருத்தாகும். ஏனென்றால், தப்பறையிலிருப்பவர்கள் தப்பறையைக் குறித்து இலகுவாக தாழ்த்திப் பேசுவதை தாங்கிக்கொள்ளும் நிலையில் இருப்பதில்லை. "அவளைவிட்டு வெளியே வாருங்கள்" என்று ஒருவர் அவர்களின் காதில் தெரிவிப்பதற்கு முன்பே, அவர்கள் சரியான மனநிலையில் இருக்கவேண்டும். அவர்கள் நம்மைக் குறித்து நம்மிடம் விசாரித்தாலும்கூட, நாம் நேர்மறையாக அதிகம் பேசிவிடக்கூடாது. மாறாக பின்வருமாறு சொல்லவேண்டும்; இப்போது என் அன்பான சகோதரரே! அல்லது சகோதரியே! நீங்கள் தேவனுடைய சத்தத்தைக் கேட்டிருப்பீர்களானால், பல்வேறு சபைப் பிரிவுகள் தப்பறையிலிருப்பதை நீங்கள் உணர்ந்திருந்தால், நீங்கள் வெளிப்படையாக உங்கள் கடமையை உணருவீர்கள். நீங்கள் அவர்களைச் சேர்ந்தவரென்று முன்பு ஒருமுறை நீங்கள் சொல்லியிருந்தீர்கள். இப்போது நீங்கள் அவர்களைச் சார்ந்தவரல்ல என்பதைப் பார்த்தால், அதனை அவர்களுக்கு சொல்லிவிடவேண்டும். ஆனால் நீங்கள் எப்போது பார்ப்பீர்கள், எப்போது கேட்பீர்கள் என்பதை வேறொருவர் உங்களுக்குச் சொல்லக்கூடாது. நீங்கள் சத்தியத்தைக் கேட்டும் நம்பியுமிருந்து, நீங்கள் பாபிலோனிலேயே தரித்திருப்பீர்களானால், நீங்கள் அவளுடைய பாவங்களுக்கு பங்காளிகளாகி விடுவீர்கள், மேலும் அவர்களிலிருக்கும் சராசரியான ஒருவரைக் காட்டிலும், அதிக குற்றமுடையோராக இருப்பீர்கள். இந்த சத்தத்தை நீங்களே கேட்கும்போது – இந்த சத்தம் உங்களுக்குச் சரியானதையும் தவறானதையும், சத்தியத்தையும் தப்பறையையும் காண்பிக்கும் – "வெளியே வர" உங்களுக்குத் தேவையான தைரியமும் கிடைக்கும் என்பதில் எந்தச் சந்தேகமுமில்லை.

### சத்தியத்திற்கு நேரான பாபிலோனின் மனப்பான்மை

ஆனால் தற்கால சத்தியத்தின் சத்தத்தைக்

கேட்பவர்களும், பாபிலோனிலிருந்து வெளியே வருவதற்கான அழைப்பிற்கு கீழ்ப்படிபவர்களும் பொதுவாக துன்புறுத்தலுக்கு உட்படுத்தப்படுகிறார்கள். நம்முடைய கர்த்தரின் நாட்களில், யூதர்களிலிருந்து வந்த விசுவாசிகளில் சிலர், ஜெப ஆலயங்களிலிருந்து புறம்பாக்கப்பட்டிருந்தனர். நம்முடைய கர்த்தருடைய ஊழியத்தின்போது நடந்த ஒரு குறிப்பிட்ட நிகழ்வை இங்கு நாம் நினைவுகூருகிறோம். பிறவிக் குருடனாக இருந்த ஒருவரிடம், அவருக்கு எப்படி பார்வை திரும்பக் கிடைத்தது என்று கேட்கப்பட்டது; அவர் இயேசுவை அறிக்கை பண்ணினபோது, மதத் தலைவர்கள் அவரை ஜெப ஆலயத்துக்குப் புறம்பாக்கினார்கள்(யோவான் 9:22,44). அதே ஆவி, அதே நிலைமை அப்போஸ்தலர்களுக்கும் ஏற்பட்டதாகத் தோன்றுகிறது.

இருண்ட யுகம் முழுவதும் வெளிச்சத்திற்கு உண்மையாக இருந்தவர்கள் சபைக்குப் புறம்பாக்கப்பட்டிருந்தனர். வெளிச்சத்தைச் சுமப்பவர்களைப் புறம்பாக்க சபையின் விசுவாசப் பிரமாணங்களும் நடைமுறைகளும் மனசாட்சிக்கு தடைவேலிகளாக இருந்தன. சத்தியத்திற்கு உண்மையாயிருந்தவர்கள் சபையைவிட்டு நீக்கப்பட்டனர். அல்லது சபைவிரோதிகளென கொல்லப்பட்டனர். சீர்திருத்தக் காலத்திற்குப் பிறகும் இந்த நிலை ஓரளவுக்கு தொடர்ந்தது. செர்வெட்டஸ்(Servetus) என்னும் ஒரு சகோதர கிறிஸ்தவர், கம்பத்தில் கட்டப்பட்டு எரிக்கப்பட்ட கொடூரமான மரணமானது கால்வின்(Calvin) என்பவரால் ஏற்பட்டது என்பது நாம் பார்த்துக்கொண்டிருக்கும் காரியத்திற்கு நல்ல ஓர் உதாரணமாகும். "உங்களை ஜெபஆலயங்களுக்குப் புறம்பாக்குவார்கள; மேலும் உங்களைக் கொலை செய்கிறவன் தான் தேவனுக்குத் தொண்டு செய்கிறவனென்று நினைக்குங்காலம் வரும்" என்று இயேசு கூறியிருக்கிறாரே. செர்வெட்டஸின் மரண தண்டனை நமது கர்த்தருடைய வார்த்தைகளின் சொல்லர்த்தமான நிறைவேற்றத்திற்கு ஓர் உதாரணமாகும்.

ஜெப ஆலயங்களில் ஆளுகை செய்தவர்கள் எப்பொழுதும் கெட்டவர்களாக இருந்திருக்கவில்லை. மாறாக தவறாகப் புரிந்துகொண்ட மனிதர்களாக இருந்தார்கள். கிறிஸ்தவர்களை வலுக்கட்டாயமாக சிறையிலடைக்கவும், பரிசுத்த ஸ்தேவானின் மரணத்தை அனுமதிக்கவுஞ்செய்த, தர்சு பட்டணத்தானாகிய சவுலும் அவ்வாறுதான் இருந்தார். எனவே, எவரும் அறிவொளி பெற்று, தங்களது வெளிச்சத்தைப் பிரகாசிக்கச் செய்யும்போது, நமது நாளின் சபைகளிலும் அவ்வாறு நிகழும். "இருள் ஒளியைப் பகைக்கிறது" என்பது எப்போதும் உண்மையாக இருந்துள்ளது போன்று, இப்போதும் உண்மையாகத்தான் உள்ளது. நீங்கள் எங்களுடன் இருந்தால் இந்த விஷயங்களை முன்வைக்க மாட்டீர்கள் என்று அவர்கள் கூறுகிறார்கள். எனவே தேவனுக்கு உண்மைத்தன்மையோடு இருப்பவர்கள் இவ்வழிமுறைப்படி ஜெப ஆலயங்களைவிட்டு வெளியேற்றப்படுகிறார்கள். உண்மையில், உண்மையுள்ளவர்கள் இப்போது "**வெளியேவர**" அழைக்கப்படுகிறார்கள்.

### "உங்களைப் பகைக்கிற உங்கள் சகோதரர்"

ஆனால் முந்தைய நாட்கள் பெற்றிராத ஒரு தனித்தன்மை நாம் வாழும் நாட்களுக்கு இருக்கிறது. மற்றவர்கள் இருளில் இருக்க, சத்தியத்தின் இந்த தூண்டுகிற சத்தம், தேவனுடைய சத்தமாக, மனசாட்சியின் சத்தமாக, அறிவொளியின் சத்தமாக இருந்து, தேவனையும், அவருடைய குணாதிசயத்தையும், அவரது திட்டத்தையும், வார்த்தையையும் தவறாக சித்தரிக்கிற பாபிலோனிலிருந்து நம்மை வெளியே அழைக்கிறது என்கிற தெய்வீகத் திட்டம் மிக அழகாய் இருப்பதை நம்மால் பார்க்கமுடிகிறது. நம்முடைய காலத்தில் அவர்கள் உச்சகட்டத்திற்கு செல்லக்கூடும் , ஆனால் நாம் அறியோம். சமூகரீதியாக கொல்லவும், திருச்சபை ரீதியாக கொல்லவும் ஒருவேளை சரீர ரீதியாகக் கொல்லவும்கூட தயங்க மாட்டார்கள். இதுவரை தேவ ஜனத்திற்கு நேரிட்ட அனைத்து துன்புறுத்தல்களும், கிறிஸ்தவர்கள் என்று கூறிக்கொள்ளும் சக விசுவாசிகளிடமிருந்து வந்தவையாகும். "என் நாமத்தினிமித்தம் உங்களைப் பகைத்து, உங்களை அப்புறப்படுத்துகிற உங்கள் சகோதரர், கர்த்தர் மகிமைப்படுவாராக என்கிறார்களே, அவர் உங்களுக்குச் சந்தோஷம் உண்டாகும்படி காணப்படுவார்; அவர்களோ வெட்கப்படுவார்கள்" – ஏசாயா 66:5.

இவர்கள் ஒருநாள், அவர்களின் தவறை உணர்வார்கள் என்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். அந்த நாள் வெகுதொலைவில் இல்லை. நமக்கு எதிரானவர்கள் பழிவாங்கப்படவேண்டும் என்று உணருவதற்குப் பதிலாக, நாம் அவர்களுக்காக மிகவும் அனுதாபங்கொள்ள வேண்டும். அவர்களுடன் அல்ல, அவர்களுக்காக அனுதாபங் கொள்ளவேண்டும், நம்முடைய கர்த்தருடைய நாளில் யூதர்களுடன் இருந்ததுபோலவே, இவர்களுடனும் இருக்கிறது என்பதை நாம் உணரவேண்டும். அந்த யூதர்களும் அவர்களுடைய ஆட்சியாளர்களும் தாங்கள் என்ன செய்கிறோமென்பதை அறிந்திருக்கவில்லை. அறிந்திருந்தால் அவர்கள்

வெட்கப்பட்டிருப்பார்கள். எப்படி தர்சு பட்டணத்தானாகிய சவுல் தான் செய்ததை உணர்ந்தபோது வெட்கப்பட்டாரோ, அதேபோல இவர்களும் உயிர்த்தெழுந்து வருகையில் தாங்கள் செய்ததை உணரும்போது வெட்கப்படுவார்கள். அதுபோலவே இன்றைய நாளில் குருடாக்கப்பட்டிருப்பவர்களுடன் இருக்கும். "சிலர் நித்திய நிந்தைக்கும்,இகழ்ச்சிக்கும்விழித்து எழுந்திருப்பார்கள்" (தானி12:2). கர்த்தர் மற்றும் அவருடைய உண்மையுள்ளவர்களின் உபத்திரவங்களில் அவர்களுடைய பங்குக்கு முறையான மனந்திரும்புதலைக் காண்பிக்கும்வரை, இந்த இகழ்ச்சி நீடிக்கும்.

### தேவையான அறிவின் அளவு

அறிவின் மதிப்பை நாம் நிச்சயமாக மிகவும் உயர்வாகப் பாராட்டுகிறோம். அதோடுகூட, "அறிவு" (மாத்திரம் இருக்குமானால்) இறுமாப்பை உண்டாக்கும், அன்போ பக்திவிருத்தியை உண்டாக்கும்"(1கொரிந்8:1) என்ற பரிசுத்த பவுலின் கூற்றின் உண்மைத் தன்மையையும் நாம் நினைவில் கொள்கிறோம். ஆயினும் கிருபையில் வளர்வதற்கு அறிவு அவசியமாகும். தெய்வீகக் குணாதிசயத்தின் அழகை நாம் உணர்ந்தால் மாத்திரமே, நாம் தேவனை மதித்துணர முடியும். எனவே அவர் திரையை விலக்கி, நம்முடைய புரிதலின் கண்களுக்கு தம்மை மேன்மேலும் வெளிப்படுத்துகிறார் என்பதற்காக நாம் மகிழ்ச்சியடைகிறோம்.

சிந்தையினுடைய திறனானது எல்லாரிடத்திலும் ஒரேமாதிரியாக இருப்பதில்லை என்று நாம் காண்கிறோம். சிலரால் சத்தியத்தை அதிக அளவில் பெற்றுக்கொள்ள முடிகின்றது, அதே சமயம் மற்றவர்களால் சிறிதளவில் மாத்திரமே கிரகிக்க முடிகின்றது. ஒருவர் தான் பெற்றுக்கொள்ளும் திறனைக் காட்டிலும் அதிகமான அறிவு அவருக்குத் தேவைப்படாது. தேவன் தம்முடைய ஜனங்களைத் தம்முடைய குமாரனாகிய நம் கர்த்தருக்குரிய குணாம்சத்தின் சாயலின்படி நியாயந்தீர்க்கிறாரே தவிர, அவர்கள் என்ன அறிந்திருக்கிறார்கள் என்பதன்படி அல்ல. அறிவு மிகவும் முக்கியமானது, மிகவும் அவசியமானது என்றாலும், புரிந்துகொள்ளுதலின் முழு நிறை அதிகாரத்தை ஒருவரும் பெற்றிருக்கவில்லை. தற்கால ஜீவியத்தில் எவரும் பரிபூரண அறிவு பெற்றிருக்கவில்லை. நமது நித்திய முடிவானது, நமது அறிவைச் சார்ந்திருக்குமானால், நாம் ஒவ்வொருவருமே குறைவுபட்டோராயிருப்போம். ஆயினும்கூட கர்த்தருக்குரியவர்கள் அனைவரும் தற்கால சத்தியத்துடன் தொடர்புக்குள்ளாகக் கொண்டுவரப்படுவார்கள் என்றும், அதன்மூலம் நியாயந்தீர்க்கப்படுவார்கள் என்றும் நாங்கள் நம்புகிறோம். அறிவை அடைந்தவர்கள், அதனுடன் இணைந்துள்ள பொறுப்பைத் தட்டிக்கழிப்பதற்கான, அல்லது சத்தியத்தை மறுதலிப்பதற்கான, அல்லது ஒளியைக் கண்டபிறகும் தேவ பயமின்றி வாழ்வதற்கான ஒரு மனப்பான்மையைக் காட்டுபவர்கள், இவ்வாறு தங்களது தகுதியின்மையை வெளிப்படுத்துவோராயிருப்பர்.

அப்போஸ்தலராகிய பவுல், கிறிஸ்துவுக்குள்ளான உண்மையுள்ளவர்களிடம் பேசுகையில், "சகோதரரே, அந்த நாள் திருடனைப்போல உங்களைப் பிடித்துக்கொள்ளத்தக்கதாக, நீங்கள் அந்தகாரத்திலிருக்கிறவர்களல்லவே, நீங்களெல்லாரும் வெளிச்சத்தின் பிள்ளைகள்"(1தெச5:4,5) என்று கூறுகிறார். கர்த்தருடைய உண்மையான ஜனம் சத்தியத்தைப் பற்றிய அறிவுக்குள்ளாக வருவார்கள் என்று அவர் சுட்டிக் காட்டுவதாகத் தோன்றுகிறது. இது, அனைத்து சத்தியங்களும் தேவை என்று பொருள்படாது, மாறாக, பரிசுத்தமாகுதலுக்கு போதுமான அளவு இருந்தால் போதும் என்று குறிப்பிடுகிறது. அதிக அளவு திறனுடைய ஒருவருக்கு அதிகஅளவு அறிவு தேவையாயிருக்கும், மற்றும் உட்கிரகிக்கவும் முடியும். சிறிய அளவு மனத்திறன் கொண்ட ஒருவருக்கோ குறைவான அளவே தேவைப்படும்.

கர்த்தருடைய ஜனங்கள் எல்லாக் காலங்களிலும் கிரகித்துக்கொள்வதற்கு, சில அடிப்படைக் கோட்பாடுகள் உள்ளன. உதாரணமாக, ஒரு தேவன் மாத்திரமே இருக்கிறார். "திரித்துவம்" என்ற கோட்பாட்டைப் பற்றிக்கொண்டிருப்பவர்கள்கூட, தேவன் ஒருவரே என்று அறிவிக்கிறார்கள். இவ்வாறு அவர்கள் தங்களுக்குள் முரண்பட்டாலும், சத்தியத்தை குறிப்பிடத்தக்க அளவு பெற்றுள்ளனர். பாவத்திற்கான தண்டனையைப் பொறுத்தவரையில் இப்படியாகவே உள்ளது. பாவத்திற்கான தண்டனை – நித்திய வேதனை என்று நம்முடைய முன்னோர்கள் நினைத்தபோது, தாங்கள் சரியானதை தீர்மானித்திருக்கிறோமென்று எண்ணினார்கள். தங்களுடைய கருத்து சரியானது என்று நிலைநாட்ட முயற்சித்து, இதை நீதியின் தண்டனை என்றார்கள். ஆனால் இந்த அடிப்படைக் கொள்கைகளுடன் தப்பறையும் பெருமளவு கலந்துள்ளது. முழு உலக மனுக்குலமும் வஞ்சகங்களின்கீழ் இருந்துவருகிறது. இப்போது விழித்துக்கொண்டிருக்கும் நாம், உண்மையில் நம்முடைய தேவன் நமக்குக் கொடுத்த சில விலையேறப்பெற்ற

செய்திகளைப் பற்றி நாம் எந்தளவு அறியாமையில் இருந்துள்ளோம், எவ்வளவு குறைவாகவே அறிந்திருந்தோம், என்பதைக் கண்டு உண்மையில் ஆச்சரியப்படுகிறோம்.

### “அழுகையும் பற்கடிப்பும்”

ஆனால் முழு அறிவைப் பெறுவதற்கு முன்பும் நாம் தேவனுடைய பிள்ளைகளாக இருந்தோம். அதுபோல, முழுமையான அறிவு இல்லாமல் மற்றவர்களும்கூட தேவனுடைய பிள்ளைகளாக இருக்க சாத்தியமுள்ளதென்று நாங்கள் நம்புகிறோம். சுவிசேஷ யுகத்தின் அறுவடையில் நாம் வாழ்ந்துவருகிறோம், தேவன் சத்திய அறிவை பூமியெங்கும் பரவச் செய்துவருகிறார். அதே நேரத்தில் எதிராளியானவன் தெய்வீகச் செய்தியைக் கற்பதிலிருந்து ஜனங்களைத் தடுக்க, தன்னால் முடிந்த அனைத்தையும் செய்துவருகிறான். எச்சரிக்கையற்றவர்களின் கண்களைக் குருடாக்குவதற்கு ஏதுவாக, அவதூறுகளின் தூசியை எழுப்பிவருகிறான்.

தேவனுடைய பிள்ளைகள் மனித பாரம்பரியமாகிய, ஆடை நீக்கிய பாலிலும், உமியிலும் ஜீவிக்க முயற்சிக்கிறார்கள். கிறிஸ்துவுக்குள்ளான சகோதரர்கள், தேவனுடைய வார்த்தையில் வழங்கப்படும் சுத்தமான போஜனத்திற்காக பசியால் வாடுகிறார்கள் என்று நாங்கள் நம்புவதனாலேயே, நாங்கள் அவர்களுடன் தொடர்பு–கொண்டு உதவ முயற்சிக்கிறோம். இல்லையெனில், சத்தியத்தை வெளியரங்கமாக்கும் அனைத்து விசேஷித்த முயற்சிகளையும் நாங்கள் கைவிட்டுவிடுவோம். ஏனென்றால் மேசியாவின் இராஜ்யம் விரைவில் ஸ்தாபிக்கப்பட்டவுடன், வேதாகமத்திலுள்ள சத்திய அறிவுக்குள்ளாக வருவதற்கு அனைவருக்கும் சாதகமான சூழ்நிலைகள் இருக்குமென்பதை நாங்கள் அறிவோம்.

ஏறக்குறைய நம்மீது வந்திருக்கும் நாட்களானது, கர்த்தருடைய ஜனங்களில் அநேகருக்கு “அழுகையையும் பற்கடிப்பையும்” நிச்சயமாகக் கொண்டுவரும். ஏனென்றால், தப்பறைக்காக நிற்பவர் எவராயினும், அவர் தேவனுக்கு விரோதியாகவே இருப்பார். அவர்கள் ஒரு மாபெரும் உபத்திரவக் காலத்திற்குள்ளாகச் செல்ல உள்ளனர். அது அவர்களின் சொந்த தவறினாலேயாகும். நம்மில் சிலர், தேவனுடைய சத்தத்தை அறுவடையின் ஆரம்பத்தில் கேட்டோம், எனவே நமக்கு முன்பே அதற்கான பொறுப்பு அடைந்திருந்தோம். சிலர் பின்னாளில் கேட்டனர். சிலர் தற்போது, பாபிலோனின் பாவங்கள் தண்டிக்கப்பட உள்ளன என்பதையும், அவர்கள் தெய்வீக தயவைப் பெறவேண்டுமானால், அவர்கள் வெளியே வந்து தேவனுடைய பக்கம் இருக்கவேண்டும் என்பதையும் பற்றி இப்போது கேட்டுவருகிறார்கள். இந்தச் செய்தியை மேலும் ஒலிக்கச்செய்ய வேண்டும் என்ற வாஞ்சையினாலேயே, சிருஷ்டிப்பின் நிழற்படக் காட்சியை (Photo drama of Creation) தயாரிக்கும்படி எங்களை இயக்கினது. இதனால் படிக்காதவர்கள்கூட இதைப் பார்த்து புரிந்துகொள்ளமுடியும். தேவ பிள்ளைகள் ஒவ்வொருவருக்கும் எந்த அளவிற்கு தனது சொந்த பொறுப்பை அங்கீகரிக்க அது உதவுகிறதோ, அது கிறிஸ்தவர்களாக அவர்களின் தற்போதைய கடமையை அவர்களுக்குச் சொல்லும் தேவனுடைய சத்தத்தைக் குறிக்கிறதாயுள்ளது.

நான் வருகிறேன் என்பதை நீங்கள் கேட்டவுடன் உங்களால் விழித்தெழ முடியுமா ?

உங்கள் இருதயத்தின் சந்தோஷம் உங்கள் கண்களைப் பிரகாசிக்குமா ?

எத்தனை விலைகொடுத்தாகிலும், புயல் வீசும் கடலின் உச்ச அலைகள்மீது நீங்கள் நின்றாலும்,
வெளியே வந்து என்னை சந்திக்க உங்களால் கூடுமா ?

நான் அழைக்கும்போது நீங்கள் திரும்பி, உங்கள் குழந்தைப் பருவத்தின் வீட்டையும், உங்கள் இருதயத்துக்கேற்ற நண்பர்களையும் விட்டுவிட்டு
சந்தோஷமாக வெளியே வர முடியுமா ?

என் வாக்குறுதியைத் தவிர வேறு எதையும் நம்பாமல்,
அவர்கள் அன்பிலிருந்து விலகி,
உங்களை எனக்குக் கையளித்து, மரிக்க முடியுமா ?

ஆம், எங்கள் சிலுவையை எடுத்து,
உம்மை விசுவாசத்தோடு பின்பற்றுவோம்!

உம் சீஷராக இருக்க, உம் நிந்தையைத் தாங்குவோம்!

ஆசீர்வதிக்கப்பட்ட இரட்சகரே,
திடமனது அடைய உம்மிடத்திற்கு விரைவோம்!

கிருபைகளை ஏராளமாக வழங்க வாக்களித்துள்ளீரே!

----------

R 5480

# ஜெபத்திலே ஊக்கமாயும் - அதன்பொருட்டு விழிப்பாயுமிருத்தல்

## FERVENT IN PRAYER - WATCHING THEREUNTO

"எந்தச் சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம்பண்ணி, அதன்பொருட்டு மிகுந்த மனஉறுதியோடும் சகல பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக்கொண்டிருங்கள்" – எபேசியர்6:18.

ஜெபமானது ஓர் அற்புதமான சிலாக்கியமாகும். பிரபஞ்சத்தின் ஒப்புயர்வற்ற ஏகசக்கராதிபதியிடம் நமது விண்ணப்பங்களுடன் செல்ல அனுமதிக்கப்படுவதென்பது, மாபெரும் தயவாகும். ஆகவே நாம் மதித்துணருதலின் ஆழமான ஆவியோடும், மனத்தாழ்மையுடனும், பயபக்தியுடனும் அவரிடம் சேரவேண்டும். நம்முடைய ஊக்கமானது எவ்வளவுக்கதிகமாக இருக்கின்றதோ, அவ்வளவுக்கதிகமாக நம்முடைய ஜெபங்கள் ஏற்றுக்கொள்ளத்தக்கதாயும், அவ்வளவுக்கதிகமாக நாம்அடையும் ஆசீர்வாதங்கள் ஏராளமாயுமிருக்கும்.

சம்பிரதாயமான ஜெபங்களே பெருமளவில் ஏறெடுக்கப்படுகின்றன. வேதாகமம் இதனை, "உதடுகளால் தேவனிடத்தில் சேருகிறார்கள், அவர்களுடைய இருதயமோ அவருக்குத் தூரமாய் விலகியிருக்கிறது" என கூறுகின்றது(ஏசாயா 29:13; மத்தேயு15:7–9). முறையற்ற விதத்தில் கர்த்தரை அணுகுவதைக் காட்டிலும் அணுகாதிருப்பதே நலம். உதடுகளால் வெறுமனே வார்த்தைகளை மாத்திரம் உச்சரிக்கும் மனிதன் ஜெபத்தை ஏறெடுப்பதில்லை. ஒரு கிறிஸ்தவன் ஜெபங்களை ஒப்பிக்கக்கூடாது, மாறாக ஜெபிக்க வேண்டும். நாம் விளங்கிக்கொள்ளாத மற்றும் நாம் சிந்திக்காத ஒரு வார்த்தையைக்கூட ஜெபத்தில் சொல்லிடலாமென நாம் நினைக்கலாகாது. சம்பிரதாயமான முறையில் ஜெபிப்பதன் வாயிலாகப் பலர் தங்களைத் தாங்களே காயப்படுத்திக்கொண்டிருக்கின்றனர்.

நீண்ட ஜெபமோ அல்லது குறுகிய ஜெபமோ, எதுவாயிருப்பினும், நாம் பிதாவினண்டை சேருகையில், இருதயத்தோடும், புரிதலோடும், சிந்தையோடும் ஆவியினாலே அவரண்டை நெருங்கிச் சேருவோமாக. வேண்டுகின்ற காரியத்தில் நம்முடைய முனைப்பான வாஞ்சையை அவர் காணும்படியாக, உண்மையான மற்றும் ஊக்கமான பக்தியுடனும், வேண்டுதலுடனும் அவரிடம் வருவோமாக. நம்முடைய கர்த்தர் சொன்னதுபோல, தம்மைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்வோராய் இருக்கும்படி பிதாவானவர் அப்படிப்பட்டோரைத் தேடுகின்றார். ஜெபத்தின் ஆவி இல்லாமல் நமது விண்ணப்பங்கள் விருதாவாயிருக்கும்.

பிதாவினுடைய நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டு, மாபெரும் பரிந்துபேசுபவரின் மூலமாக அவருக்கு புத்திரர்களென்ற உறவுக்குள் வந்தவர்களைத் தவிர, வேறெவரும் பிதாவிடம் ஜெபத்தை ஏறெடுக்க முடியாது. மற்றவர்களனைவரும் அந்நியர்களும் பரதேசிகளுமாயிருக்கிறார்கள். தொழுதுகொள்ளுதல் அல்லது ஸ்தோத்திரம் செலுத்துதலுக்கும் மற்றும் ஜெபம் செய்வதற்குமிடையே வேறுபாடு உள்ளது. யார் வேண்டுமானாலும் ஆராதனை செய்யலாம் – அதாவது வழிபடலாம், மரியாதை செலுத்தலாம். நன்றியையும் பாராட்டையும் தெரிவிக்கலாம். ஆனால் தேவனிடம் வேண்டுதல் செய்யும் சிலாக்கியம் கிறிஸ்துவுக்குள்ளாக ஏற்றுக்கொள்ளப்பட்டவர்களுக்கு மாத்திரமே உரியதாகும்.

ஜெபத்திற்கும் விண்ணப்பத்திற்கும் இடையேயும்கூட வித்தியாசமுள்ளது. ஜெபம் என்கிற பதமானது, எந்தவொரு பெரிய அல்லது சிறிய கோரிக்கைக்கும் பொருந்தும். அதேசமயம், விண்ணப்பம் என்கிற பதத்திற்கு அர்த்தம் –, ஒரு காரியத்தின்மீதான ஒரு விசேஷ வேதனையளிக்கும் வாஞ்சையாகும் – தீவிரமான ஏக்கத்துடன் கெஞ்சிக்கேட்பதாகும். ஆனால் அது சாதாரணமான ஜெபமாக இருந்தாலும் சரி அல்லது தீவிரமான ஜெபமாக – விண்ணப்பமாக இருந்தாலும் சரி – நாம் மாபெரும் சிருஷ்டிகரின் சமுகத்திற்கு முன்பாக நுழைகிறோம் என்பதையும், அவ்வாறு செய்வதில் நாம் ஒரு மாபெரும் சிலாக்கியத்தை அனுபவித்து வருகிறோம் என்பதையும் மதித்துணர்ந்து, எப்பொழுதும் ஆவியிலேயே சேரவேண்டும்.

### "அதன்பொருட்டு விழித்திருங்கள்"

மேலும் பரி. பவுல், "அதன்பொருட்டு விழித்துக்கொண்டிருங்கள்" என்று கூறுகின்றார். சிந்தையில் ஜாக்கிரதையுடனிருக்கும் மனப்பான்மையே விழித்துக்கொண்டிருப்பது என்பதாக தெரிகின்றது. நமக்குத் தேவையான காரியங்களுக்காக நாம் ஜெபிக்கவேண்டுமென்றும், அவர் அவற்றைக் கொடுப்பாரென்றும் கர்த்தர் சுட்டிக்காட்டியிருக்கிறாரென நாம் உண்மையிலேயே நம்பினால், அவற்றைப் பெறும்போது அவைகளை அடையாளங் கண்டுகொள்ள நாம் ஜாக்கிரதையுடனிருத்தல் அவசியமாகும். நாம் கேட்கும் காரியங்களைக் குறித்து நாம் கவனமாக இருக்கவேண்டும், மேலும் வாக்களிக்கப்பட்ட விஷயங்களையே, நமக்கு

உரிமையளிக்கப்பட்ட விஷயங்களையே நாம் கேட்கிறோமா என்பதில் தெளிவாக இருக்கவேண்டும்.

கர்த்தருடைய தெய்வாதீனமான வழிநடத்துதல்களையும் நாம் விழிப்புடன் கவனிக்கவேண்டும். ஜெபம் செய்தபிறகு, தான் எதற்காக ஜெபித்தோம் என்பதை மறந்துவிடுபவராயும், தனது வேண்டுகோளுக்கு பதில் கிடைத்ததா இல்லையா என்று சொல்ல முடியாதவராயுமுள்ள நபர், நிச்சயமாக தான் பெற்றிருக்கவேண்டிய ஒரு மாபெரும் ஆசீர்வாதத்தினைத் தவறவே விட்டிருக்கிறார்.

ஜெபமானது மனிதனிடம் அல்ல, தேவனிடம் கேட்பதற்காகவே ஏறெடுக்கப்படவேண்டும். இது நம்முடைய இருதயங்களைத் தூண்டவும், குறிப்பிட்ட சில காரியங்களுக்காக எதிர்பார்த்திருக்க நம்மை உயிரூட்டவும், திட்டம்பண்ணப்பட்டுள்ள ஒன்றாகும். மேலும் நம்முடைய ஜீவியங்களை நமது வேண்டுதல்களுக்கிசைவாக காத்துக்கொள்வது நமது முனைப்பான முயற்சியாக இருக்கவேண்டும். "அறுவடையின் எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள்"என இயேசு தம்முடைய சீஷர்களிடம் சொன்னபோது, அவர்கள் பரமபிதாவிற்கே அவருடைய வேலை எதுவென சொல்ல வேண்டுமென்று அவர் அர்த்தப்படுத்தவில்லை. மாறாக, மற்றவர்கள் வேலைக்கு வரும்படி, தேவன் தமது அறுவடை வயலுக்கு வேலையாட்களை அனுப்புவதற்கு அவர்கள் அக்கறை கொண்டிருக்க வேண்டுமென்பதையும், சீஷர்கள் தங்கள் ஜெபங்களுக்கிசைவாய் தங்களுடைய ஊழிய வாய்ப்புகளுக்காக விழிப்புடனிருக்க வேண்டுமென்பதையுமே அவர் அர்த்தப்படுத்தினார்

கர்த்தர், நாம் ஜெபத்தில் விடாமுயற்சியுடனிருக்க வேண்டுமென்பதை தொடர்ச்சியாக நமது கவனத்திற்குக் கொண்டுவருகின்றார். தேவனுடைய பார்வையில் விடாமுயற்சியானது ஓர் இன்றியமையாத குணமாகும். இது பொறுமையையும், கவனத்தையும், ஆர்வத்தையும் உள்ளடக்கியது. சுருக்கமாக இது, கர்த்தருடைய ஜனங்கள் அபிவிருத்தி செய்யவேண்டிய ஆவியின் ஒவ்வொரு கனியுடனும் தொடர்புடையதாகும். பொறுமை நல்லதுதான், ஆனால் அதற்கும் விடாமுயற்சி தேவை. அன்பும் நல்லதுதான், ஆனால் அதற்கும் விடாமுயற்சி தேவை.

மனஉறுதி சித்தத்தை உண்டாக்குவதில்லை. சித்தமானது ஏற்கனவே இருக்கின்ற ஒன்று. ஆரம்பத்தில் தேவன் அங்கீகரிப்பது சித்தத்தையே. ஆனால், பல்வேறு அனுபவங்கள், சோதனைகள், சிரமங்கள், சகிப்புத்தன்மையின் சோதனைகள் ஆகியவற்றின் வாயிலாக, கர்த்தர் நம்மைப் பரீட்சித்து, நம்மை வளரச்செய்கிறார். அவருடைய அங்கீகாரத்தைப் பெற்றிருக்கும் இந்த எல்லாக் குணங்களிலும் நாம் மிகவும் நேர்மறையான குணாதிசயம் உள்ளோராக மாற வேண்டுமென அவர் விரும்புகிறார். ஆகவே நம்முடைய ஜெபமனைத்தும் இருதயத்திலிருந்து ஆவியினாலே ஏறெடுக்கப்படவேண்டும். இராஜ்யத்தில் ஒரு பங்கினைக் கொடுப்பதன்மூலம் கனப்படுத்துவதற்கேதுவான அந்தக் குணத்தை நாம் அடைந்துவிட்டோமென்று கர்த்தர் காணும்வரை, நாள்தோறும் விடாமுயற்சியுடன் அதன் பொருட்டு விழித்திருக்கவேண்டும்.

### கர்த்தருடைய தாமதத்தினால் கற்றுக் கொள்ளக்கூடிய பாடங்கள்

நம்முடைய வேண்டுதலுக்கு நம்முடைய கர்த்தர் விரைவாகப் பதிலளிக்காததற்கு ஒரு காரணம் என்னவாக இருக்கலாமென்றால், நாம் பதிலுக்காக விழிப்பாயிருக்கக் கற்றுக்கொள்ளவும், இதன்மூலம் நாம் வேண்டிக்கொண்டதை அவர் கொடுத்திருக்கிறார் என்பதை நாம் தெளிவாகப் புரிந்துகொள்ளும்போது, அதனை மதித்துணர்ந்து அவருக்கு நன்றிசெலுத்திடுவதற்கான பாடத்தை நாம் கற்றுக்கொள்ளவேண்டுமென்று அவர் விரும்புகிறார் என்பதே. ஆகவே, நாம் மிகுந்த மனஉறுதியுடன் ஜெபம்பண்ணி – வெறுமனே ஒரு சில நிமிடங்கள் அல்லது ஒரு நாள் அல்லது ஒரு வாரம் மாத்திரம் என்றில்லாமல், பதில் வரும்வரை விழிப்புடன் காத்திருக்கவேண்டும். நம்முடைய விசுவாசத்தைச் சோதிப்பதற்காகவோ அல்லது நம்முடைய ஊக்கத்தை அதிகரிக்கச்செய்து, ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ள ஒரு சிறந்த நிலைமைக்கு நம்மை கொண்டுசெல்வதற்காகவோ, நமது வேண்டுதலுக்குப் பதிலளிக்க மேலும் தாமதித்தல் சிறந்ததாயிருக்குமெனக் கர்த்தர் காணக்கூடும். சுயத்தை வெறுமையாக்கி, கிறிஸ்துவின் சிந்தையைப் பெற்றுக்கொள்ள ஆயத்தமாவதற்கு காலம் தேவைப்படுகின்றது. சிலருக்கோ, மற்றவர்களுடன் ஒப்பிடுகையில் கூடுதல் காலம் தேவைப்படுகின்றது.

தனது மாணவர்களுக்கு எப்படி ஒரு ஆசிரியரும், தனது பிள்ளைகளுக்கு எப்படி ஒரு பெற்றோரும் மிகச்சிறந்த நடைமுறையை மேற்கொள்வார்களோ, அவ்வாறே கர்த்தரும் நமக்குச் செய்வாரென்று நாம் உறுதியாக நம்புகிறோம். பிள்ளைக்கு எது சிறந்ததென்று பெற்றோர் நிதானித்து தீர்மானிப்பார்கள். அப்படியே, நம்முடைய பரமபிதாவும் நமக்கு நலமானதையே கொடுக்க விரும்புகிறார். சில நேரங்களில், அவர் நம்முடைய வேண்டுதல்களுக்குப் பதில் கிடைக்கும் முன்பு, நாம் நெடுங்காலம் காத்திருப்பதே

நலமெனக் காண்கிறார். மற்ற நேரங்களில் அவர் நம்முடைய ஜெபத்திற்கு விரைவாகப் பதிலளிக்கக்கூடும். ஆயினும் அப்போஸ்தலர் பவுல் அறிவிக்கிறபடி, அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்புகூறுகின்றபடியால், சகலமும் நமது நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று நாம் அறிந்திருக்கிறோம். நாம் எப்போதுமே நம்முடைய கர்த்தர் ஏற்கச்சொல்லும் நிபந்தனைகளை மனதில் தாங்கியிருக்கவேண்டும். ''நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்''–யோவா 15:7.

கர்த்தருடைய சிந்தை என்ன, அவர் எதையெல்லாம் வாக்களித்துள்ளார், அவர் எதையெல்லாம் வாக்களிக்கவில்லை ஆகியவற்றை அறிந்துகொள்ள, நாம் வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்க்கவேண்டும். நாம் அதிகமாய் அன்புகூர்ந்து தொழுதுகொள்ளுகிறவரும், நம்முடைய அன்பிற்கும் உண்மைத்தன்மைக்கும் பாத்திரமானவருமான, அவருடைய சித்தத்திற்கு முழு இசைவாய் இல்லாத எதையுமே, முழுமையாகப் பிரதிஷ்டை பண்ணிக்கொண்டவர்கள் விரும்ப மாட்டார்கள். நாம் வாஞ்சிக்கும் ஊழியத்தின் வாய்ப்பையும் ஆசீர்வாதத்தையும் மாத்திரம் அவர் ஆயத்தப்படுத்தாமல், இந்த ஆசீர்வாதத்தை அல்லது வாய்ப்பினைச் சிறந்தவகையில் கொண்டுவரும் சூழ்நிலைகளையும் நிலைமைகளையும்கூட அவர் ஆயத்தஞ்செய்கிறார் என்பதையும் நாம் நினைவில் கொள்ளவேண்டும். இதற்கு கர்த்தருக்காகக் காத்திருத்தல் அவசியமாகிறது. மேலும் இக்காத்திருத்தலென்பது நம்முடைய இருதயத்தின் வேண்டுதல்களை அருளிச்செய்வதற்காக அவருடைய ஏற்றநேரத்திற்குப் பூரண நம்பிக்கையுடனும் பொறுமையுடனும் காத்திருப்பதாகும். ''நேர்மையாளனுடைய வல்லமை மிக்க மன்றாட்டு பயன் விளைவிக்கும்'' – யாக் 5:16. (திருவிவிலியம்).

கர்த்தருடைய பரிசுத்தவான்களின் வீடுகளில், எங்கெல்லாம் சாத்தியமோ, குடும்ப ஜெபமும்கூட மிகவும் விரும்பத்தக்க ஒன்றாகும். மேலும் தேவனுடைய பிள்ளைகள் ஒன்றுகூடிவரும்போது, அவர்களுக்கிடையில் ஜெபம் செய்வது மிகவும் ஏற்புடையதாகும். நம்முடைய கர்த்தர் தம்முடைய சீஷர்களோடு ஜெபிப்பதற்காகவும், அவர்களுக்காகவும் இதை அனுமதித்தார். மேலும் இது அப்போஸ்தலர்களாலும் பரிந்துரைக்கப்பட்டது. நாம், நமக்காக மாத்திரமல்லாமல் எல்லாப் பரிசுத்தவான்களுக்காகவும், கர்த்தருடைய காரணத்திற்காகவும் ஜெபம் பண்ணவேண்டும். தேவ பிள்ளைகளிடையே பொதுவான மற்றும் தனிப்பட்ட ஜெபம் ஆகிய இரண்டையுமே வேத வசனங்கள் பரிந்துரைக்கின்றன. ஆனால் ஒரு கிறிஸ்தவனுடைய ஜீவியத்திற்கு அந்தரங்கமான ஜெபம் (secret prayer) முற்றிலும் அவசியமாகும்.

### ஜெபிக்கும் மனப்பான்மை மாத்திரம் போதாது

கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களென்று சொல்லிக்கொள்ளும் சிலர், வார்த்தைகளில், ஒருவகையான ஜெபத்தின் முறையற்ற தன்மைகளை வலியுறுத்துவதையும், ஜெபத்தில் ஏதேனும் ஒரு குறிப்பிட்ட தோரணையைப் பாவித்துக்கொள்வதையும் அல்லது வாழ்க்கை முழுவதுமே ஒரு ஜெபமாக இருக்க வேண்டுமென்பதால், எந்தவொரு வரையறுக்கப்பட்ட நேரத்திலும் ஜெபிப்பது மற்றும் ஜெபத்தில் மண்டியிடுவது தேவையற்றதெனக் கூறுவதையும் கேட்கையில், நாங்கள் அவ்வப்போது ஆச்சரியமடைந்திருக்கிறோம். அத்தகைய ஒரு முன்மொழிவு நம்மை வியக்கவைக்கிறது. அதன் பகுத்தறிவுக் காரணத்தை(logic) புரிந்துகொள்ள முடியாதிருக்கிறது. நாம் எப்பொழுதும் ஜெபிக்க வேண்டுமென்பதும், எப்போதும் ஜெபத்தின் ஆவியில் இருக்கவேண்டுமென்பதும், நாம் எப்போதும் பரிசுத்தத்தின் அழகை நம்முடைய வாழ்வில் வெளிப்படுத்தவும் , நாம் உலகில் பிரகாசிக்கும் சுடர்களாக இருக்கவும், கர்த்தரிடம் மிகவும் அர்ப்பணிப்புடன் இருக்கவேண்டுமென்பதும் உண்மைதான். ஆனால் எந்தவொரு கிறிஸ்தவனும் ஒரு குறிப்பிட்ட மற்றும் முறையான பாங்கில், முழங்கால் படியிடுவதை விரும்பி, ஒருவேளை முடிந்தால் தனிமையில், குறிப்பிட்ட நேரங்களில் கர்த்தரிடம் செல்லாமல், இந்த இருதய மனப்பான்மையைப் பேணவோ அல்லது தனது வாழ்வில் தேவனை மகிமைப்படுத்தவோ முடியாது. ''உன் அறைவீட்டுக்குள் பிரவேசித்து, உன் கதவைப் பூட்டி, அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம் பண்ணு'' – மத்தேயு 6:6.

நம்முடைய அன்பான ஆண்டவரின் ஜெபிக்கும் நிலையான மனப்பான்மையானது, தமது வாழ்க்கையின் பரபரப்பான வேலைகளிலிருந்து விலகி – சில சமயங்களில் சுருக்கமாகவும், சில சமயங்களில் மலையில் தனிமையாக ஜெபத்தில் இரா முழுவதுமாகவும் – பிதாவோடு தனிமையில் உறவாடுகின்ற அவருடைய தனிப்பட்ட பக்தி முயற்சிகளுக்கு தடையாக இருக்கவில்லை. எல்லா மனித உதவிகளிலிருந்தும் கர்த்தர் தாமே தனிமைப்படுத்திக் கொண்டது, அவரை ஜெபத்திலும் ஐக்கியத்திலும் பிதாவிடம் இன்னும் நெருங்கியவராகவும், அடிக்கடி அணுகவும் செய்தது. அப்படியாகவே ஆண்டவரின் மெய்யான பின்னடியார்களிடமும் இருக்கின்றது அல்லது

இருக்கவேண்டும். அவருடைய குணாதிசய சாயலில் நாம் வளர்கையில், அவரைப்போலவே நாமும் இடைவிடாமல் ஜெபிப்போம். அவரை நம்முடைய எல்லா நம்பிக்கைகளுக்கும், மகிழ்ச்சிகளுக்கும் மையமாக அடையாளங் கண்டுகொண்டு, எல்லாவற்றிலும் கர்த்தருக்கு நம்முடைய இருதயங்களில் ஸ்தோத்திரம் செலுத்தியும், பாடியும், இன்னிசை இசைத்துமிருப்போம்.

### நம்முடைய "தனிமையான வழி"

சில சமயங்களில் நம்முடைய அன்பானவர்கள்கூட நம்முடைய துக்கங்களிலும் தேவைகளிலும் முழுமையாகப் பங்குகொண்டு, மதித்துணர முடியாததை நாம் அனைவருமே உணர்கிறோம். நம்முடைய போராட்டங்களிலும் சோதனைகளிலும் அவர்களால் நம்மிடம் முழுமையாக அனுதாபம் கொள்ளமுடிவதில்லை. நம்முடைய அன்பான கர்த்தருக்கு நேர்ந்ததுபோலவே, இந்த உணருதலானது நம்மை அடிக்கடி கிருபசனத்தண்டை சேர்க்கவேண்டும். அங்கு நம்மை சரியாகப் புரிந்துகொள்ளக்கூடிய ஒருவருடைய செவி நமக்காக திறந்திருக்கிறதென்றும், அவரால் நம்முடைய பலவீனத்திற்குத் தேவையான உதவியனைத்தையும் தரமுடியுமென்றும், அவர் நம்முடைய அபூரண மாம்சத்தில் செய்யக்கூடிய மற்றும் நம்மிடம் இருக்கும் ஆற்றலின் வரம்பை அறிவாரென்றும், வேறு எவராலும் கொடுக்கமுடியாத பூரண அனுதாபத்தை அவரால் கொடுக்கமுடியுமென்றும் நாம் எப்போதுமே உறுதியாக நம்புகிறோம். அவர் அன்பில், ஒரு ஞானமான நோக்கத்திற்காக தம் பிள்ளைகளின் வேண்டுதல்களுக்கு ஒரு தெளிவான பதிலை ஒரு சில காலத்திற்குத் தள்ளிவைத்தாலும், அவர்களின் அழுகையைக் கவனிக்கவும், செவிசாய்க்கவும் அவர் ஒருபோதும் தவறுவதில்லை.

### யாக்கோபு ஒரு முன்மாதிரி

பதான் அராமிலிருந்து திரும்பும்போது ஏசாவைச் சந்திக்க எதிர்நோக்கிக் கொண்டிருந்தநேரத்தில் ஏறெடுக்கப்பட்ட யாக்கோபின் ஜெபமானது, கர்த்தருடைய வார்த்தையில் காணப்படுவதிலேயே மிகுந்த ஊக்கமான, மனஉறுதியான ஜெபத்தின் மிகச் சிறந்த எடுத்துக்காட்டுக்களில் ஒன்றாகக் கருதப்படலாம். இது தேவன் மீதான நம்பிக்கையினாலும் பற்றுறுதியினாலும் நிறைந்திருக்கின்றது. இது அவரது தாத்தா ஆபிரகாம் மற்றும் அவரது தகப்பன் ஈசாக்கு ஆகியோருக்கு தேவன் அளித்த வாக்குத்தத்தத்தையும், மற்றும் அவ்வாக்குத்தத்தம் தன்னிடமாக மீண்டும் புதுப்பிக்கப்படுவதையும் விவரிக்கின்றது. தன்னை மீண்டும் தனது சொந்த தேசத்திற்கு அழைத்துவருவதாக கர்த்தர் அளித்த வாக்குத்தத்தத்தை அவர் கர்த்தரிடம் குறிப்பிடுகிறார் : "அடியேனுக்கு தேவரீர் காண்பித்த எல்லா தயவுக்கும் எல்லா சத்தியத்துக்கும் நான் எவ்வளவேனும் பாத்திரன் அல்ல, நான் கோலும்(மாத்திரம் உடையவனாய்) கையுமாய்(வீட்டிலிருந்து ஓடிப்போகும்போது) இந்த யோர்தானைக் கடந்துபோனேன்; இப்பொழுது இவ்விரண்டு பரிவாரங்களையும் (திரளான கூட்டத்தை) உடையவனானேன்(ஆதி32:10) என்று ஜெபித்த அவரது வார்த்தைகளிலிருந்து, அவரது மனத்தாழ்மையானது வெளிப்படுகின்றது.

அவர் ஏசாவைப் பற்றிய தன்னுடைய பயத்தை கர்த்தரிடம் தெரிவிக்கும் அதே வேளையில், சர்வவல்லமையுள்ளவர் மீதுள்ள நம்பிக்கையால் தன்னுடைய பயம் ஈடுகட்டப்படுவதை காண்பிக்கின்றார். இந்த நேரத்தில்தான், சந்தேகமின்றி இந்த ஜெபத்திற்கு விடையளிக்கும் வண்ணமாக, கர்த்தருடைய தூதனானவர் யாக்கோபுக்குத் தோன்றினார். யாக்கோபு தேவனுடைய வல்லமை மீதிலும், தன்னைப் பாதுகாத்து தன்னை ஒரு பெரிய தேசமாக்குவதாக தேவன் அளித்த வாக்குத்தத்தம் மீதிலும் விசுவாசம் நிறைந்தவராய், அவர் தூதரைப் பற்றிப் பிடித்துக்கொண்டு, "நீர் என்னை ஆசீர்வதித்தாலொழிய உம்மைப் போகவிடேன்" என்று கூறினார். இங்குள்ள தூதனானவர் ஒரு மனிதனாகத் தோன்றியிருந்தாலும், தன்னைச் சந்திப்பதற்காக அனுப்பப்பட்ட கர்த்தருடைய பிரதிநிதி என்பதாகவே யாக்கோபு அவரை அடையாளங் கண்டுகொண்டார்.

தூதனானவர் யாக்கோபின் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள போதுமான சக்திவாய்ந்தவராய் இருக்கவில்லை என்று நாம் யூகிக்கமுடியாது. மாறாக, தேவன் அவரை ஆசீர்வதிப்பதில் மகிழ்ச்சியடைந்தார் என்றும். இந்தச் சூழ்நிலைகளானது கர்த்தருடைய இந்த ஆசீர்வாதத்திற்கான யாக்கோபின் ஏக்கத்தின் பேராவலை வெளிக்கொணரும் நோக்கத்திற்காகவும், அவருடைய பேராவலின் தீவிரத்தையும் ஆழத்தையும் நிரூபிக்கவுமே வடிவமைக்கப்பட்டிருந்தன என்றும் நாம் கருதலாம். இது நிரூபிக்கப்பட்டபோது, தேவன் மாத்திரமே அருளக்கூடிய ஆசீர்வாதத்தைப் பற்றிய ஆழ்ந்த மதித்துணருதலையும், தேவனிடம் இணக்கமாக இருக்க வேண்டுமென்கிற இந்த மாபெரும் ஏக்கத்தையும் அவர் வெளிப்படுத்தினபோது ஆசீர்வாதம் – யாக்கோபிற்கு கிட்டியது. இதுவே யாக்கோபின் வெற்றி. அப்பேர்ப்பட்ட விசுவாசத்திற்கும் ஆற்றலுக்கும் வைராக்கியத்திற்கும் வெகுமதியளிப்பதில் தேவன் பிரியப்பட்டார்.

## ஆவிக்குரிய இஸ்ரயேலருக்கான பாடங்கள்

யாக்கோபு ஓர் சுபாவ மனிதனாக மாத்திரமே இருந்தார். ஆனாலும் அவருடைய ஜெபத்தில் கிறிஸ்துவுக்குள்ளான புதுசிருஷ்டிகளுக்கு அதிக ஆதாயம் தரக்கூடிய ஒரு பாடம் உள்ளது. யாக்கோபைப் போலவே நாமும் தேவனோடு போராடவேண்டும் என்பதல்ல, ஏனென்றால் நாம் தேவனுடைய புத்திரர்கள், புத்திரர்களுக்குப் பணிவிடைக்காரர்களைக்காட்டிலும் மிக நெருக்கமான உறவு இருக்கிறபடியால், அவருடைய தயவினைப்பெற தேவனோடு போராட வேண்டிய அவசியமில்லை. மறைந்த ஆயர் பிலிப்ஸ் ப்ரூக்ஸ் (Bishop Philips Brooks) அவர்கள், “ஜெபமானது தேவனுடைய விருப்பமின்மையை வெல்வதல்ல; மாறாக, அது தேவனுடைய விருப்பத்தைப் பற்றிப் பிடிப்பதாகும்” என்றுகூறி, உண்மையான சிந்தனையை மிக அழகாகவும் சுருக்கமாகவும் வெளிப்படுத்தியிருக்கிறார். இப்போது அவருடைய தயவு நமக்கிருக்கின்றது. மேலும் அவர் தம்முடைய உச்சிதமான ஆசீர்வாதங்களை நமக்கு வாக்களித்துமிருக்கிறார். ஆனால் யாக்கோபின் ஊக்கமான வைராக்கியமும், விசுவாசமும், மனத்தாழ்மையும், அவருடைய மனஉறுதியுள்ள சிந்தையும், நமக்கு முன்மாதிரியும் சாயலுமாய் , தகுதியுடையவைகளாயுள்ளன. நம்முடைய கர்த்தர் நமக்கு நினைப்பூட்டினபடி, நாம் சோர்ந்துபோகாமல் எப்பொழுதும் ஜெபம் பண்ணவேண்டும். தேவனுடைய உச்சிதமான பரிசுகளை நமக்குக் கொடுப்பதற்கான அவருடைய விருப்பத்தில் நாம் விடாப்பிடியாகவும், அசைக்கமுடியாத விசுவாசங் கொண்டிருக்கவும் வேண்டுமென்று அவர் விரும்புகின்றார்.

நம்முடைய ஜெபத்திற்குப் பதிலாக வரும் ஆசீர்வாதமானது, வேண்டின உடனேயே வரவில்லையென்றால், நாம் “ஜெபத்திலே உறுதியாய்த் தரித்திருந்து” தொடரவேண்டும். பதில் வர தாமதமானால் நம்முடைய பிதா தம்முடைய ஞானத்தில் அதற்கான ஒரு காரணத்தைக் கண்டிருக்கிறாரென்கிற உறுதியுடன், அவருடைய சித்தத்திற்கு முழுமையாகவும், இனிமையாகவும் அடிபணியும் மனப்பான்மையில், கர்த்தருடைய ஏற்றவேளைக்காகப் பொறுமையோடு காத்திருக்கவேண்டும். அவர் ஒருபோதும் தமது பிள்ளைகளைப் பற்றி அலட்சியமாகவோ, அவர்களின் தேவைகளைக் கவனிக்காதவராகவோ, உதவிக்காகவும் தம்முடனான ஐக்கியத்திற்காகவுமான அவர்களது கூக்குரலைக் கேளாதவராகவோ இருப்பதில்லை. ஆனால் தேவனுடைய மகிமையே நம்முடைய வாஞ்சையாக இருக்கும்படி பார்த்துக்கொள்வோமாக.

அந்தோ! எத்தனை ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் யாக்கோபைக் காட்டிலும், ஜெபத்திலிருக்கும் தங்கள் உரிமை பற்றி மிகக் குறைவாகவே கூர்ந்து மதித்துணருகிறார்கள். தேவன் கொடுக்கப் பிரியப்படுகிற எவ்விதத்திலாகிலும், அவருடைய ஆசீர்வாதத்தைத் தரும்படிக்கு யாக்கோபு கேட்டார். தேவன் வாக்களித்திருந்த பூமிக்குரிய நல்ஈவுகளைக்கூட யாக்கோபு குறிப்பிடவில்லை. அவருடைய மாபெரும் உடன்படிக்கையின்படி, தனக்கும் தன்னுடைய சந்ததிக்கும் நிறைவேற்றுவதிலிருக்கும் கர்த்தருடைய மகிமையையே அவர் விரும்பினார். தேவப் பிள்ளைகளில் பலரும் விண்ணப்பம் பண்ணியும் தங்கள் மாம்சீக இச்சைகளுக்கு ஊழியம் செய்யும்படி செலவழிக்க வேண்டுமென்று தகாதவிதமாய் விண்ணப்பம் பண்ணுகிறபடியால், பெற்றுக்கொள்ளாமலிருக்கிறார்கள். அவரது பிள்ளைகளின் இம்மைக்குரிய தேவைகளைப் பார்த்துக்கொள்வாரென்றும், மற்றும் மிகச் சிறியதோ அல்லது பெரியதோ எதுவாக இருந்தாலும், நிச்சயமாக அவர்களுக்குச் சிறந்ததையே கொடுப்பாரென்றும் கர்த்தர் வாக்களித்துள்ளார்.

புதிய சிருஷ்டிகளாக நம்முடைய வாஞ்சைகளும் வேண்டுதல்களும், குறிப்பாக நம்முடைய ஆவிக்குரிய நலன்கள் தொடர்புடைய விஷயங்களுக்காகவே இருக்கவேண்டுமென்பதை எவ்வளவு குறைவானோர் நினைவில் வைத்துள்ளனர். அதாவது, இந்த வகையான ஆசீர்வாதங்களையே நாம் அடைய வேண்டுமென்று பிதாவும் விரும்புகிறார், மற்றும் நமக்குக் கொடுப்பதாகவும் வாக்களித்துள்ளார். பூலோகப் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க பிரியப்படுகிறபடியே நம்முடைய பிதாவும் , எல்லா ஆசீர்வாதங்களையும் மகிமையையும் உள்ளடக்கியதும், மிக உயரிய அர்த்தத்தில், நமக்கு விரும்பத்தக்க எல்லாவற்றையும் ஏற்பாடு செய்கிறதுமான, தம்முடைய மிக உச்சிதமான ஈவாகிய பரிசுத்த ஆவியைக் கொடுக்கப் பிரியப்படுகிறாரென்று, அவர் நமக்கு உறுதியளிக்கின்றார். கர்த்தருக்கு தங்களுடைய அனைத்தையும் அர்ப்பணித்துள்ள தேவபிள்ளைகள், தங்களுடைய ஜீவியத்தின் ஒரே குறிக்கோளாக, தங்களுடைய அனைத்து ஜெபங்களின் பாரமாக – கர்த்தருடைய ஆவியை, பரிசுத்தத்தின் ஆவியை, கிறிஸ்துவினுடைய ஆவியை, தெளிந்த புத்தியுள்ள ஆவியையே அதிகஅளவில் தாங்கள் பெற்றுக் கொள்ளவேண்டும் என்னும் ஒரு மையப்புள்ளிக்கு கொண்டுவர முடிந்தால், அது என்னே ஒரு சொல்லிமுடியாத ஆசீர்வாதத்தை அர்த்தப்படுத்துகிறதாய் இருக்கும்!

### தேவனிடத்தில் வல்லமைபெற்ற இஸ்ரயேல்

யாக்கோபுக்கு ஆசீர்வாதம் கிடைத்தது, அதனுடன் பெயர் மாற்றமும் நிகழ்ந்தது. அதுமுதல் அவர் இஸ்ரயேல் என்றழைக்கப்பட்டார். இதற்கு தேவனிடத்தில் வலிமைபெற்றவன்(Mighty with God) அல்லது தேவனுடைய பிரபு (A prince with God) என்பது அர்த்தமாகும். ஆகவே இந்தப் புதிய நாமம் எப்போதுமே அவருக்கு ஊக்கமளிக்கும் ஆதாரமாகவும், புதிய வைராக்கியத்திற்கும், கர்த்தரை நம்புவதற்குமான ஒரு தூண்டு சக்தியாகவும் இருந்தது. இந்த நாமத்தை யாக்கோபின் சந்ததியினர் அனைவரும் சுதந்தரித்துக்கொண்டனர். நம்முடைய கர்த்தரும், உண்மையான இஸ்ரயேலருமாகிய கிறிஸ்துஇயேசுவை நிஜத்தில் நாம் பெற்றிருக்கிறோம். அவரே விசுவாசத்தினாலும், பிதாவுக்குக் கீழ்ப்படிந்ததாலும் ஜெயங்கொண்டவரானார். உலகத்தையும், மாம்சத்தையும், எதிராளியையும் ஜெயங்கொண்டு, அவரது மாபெரும் போராட்டத்தின் விளைவாக, தேவனுடைய உயரிய ஆசீர்வாதத்தைப் பெற்றவருமானார். இப்போது அவர் உச்ச உயரளவாக உயர்த்தப்பட்டு, பூமியின் இராஜாக்களுக்கு பிரபு என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றார். மேலும் அவர் பிதாவுடன் அவருடைய சிங்காசனத்தில் வீற்றிருக்கிறார்.

இயேசுவின் சீஷர்களான நாமும்கூட, இஸ்ரயேல் என்னும் நாமத்தைத் தரித்துள்ளோம். அவரைப்போலவே நாமும் உண்மையுள்ளவர்களாக இருந்தால், பிதாவினால் நாமும் அவரைப்போலவே உயர்த்தப்படுவோம். நாமும் நம்முடைய கர்த்தரும் தலையுமானவருடன் அவருடைய சிங்காசனத்தைப் பகிர்ந்துகொள்வோம். நம்முடைய எஜமானர் உயர்த்தப்பட்டதுபோலவே நாமும், தூதர்கள், துரைத்தனங்கள் மற்றும் அதிகாரங்களுக்கு மேலாக உயர்த்தப்படுவோம். இந்த சிந்தனை எவ்வளவு மகிமைவாய்ந்தது! எவ்வளவு அற்புதமானது! நம்முடைய அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் நாம் உறுதிசெய்துகொள்ள, இந்த மாபெரும் நம்பிக்கையானது மிகுந்த ஜாக்கிரதைக்கும் விழிப்பிற்கும் நம்மை ஊக்குவிக்கவேண்டாமா?

நாம் மரணபரியந்தம் உண்மையுள்ளவர்கள் என்பதை நிரூபித்தால், ஜெயங்கொண்டவன் அல்லது தேவனிடத்தில் வல்லமைபெற்றவன் என்கிற நாமம் நம்முடைய நாமமாக இருக்கும். நம்முடைய தலையானவருக்குப் பொருந்தினதுபோல, கர்த்தருடைய உண்மையுள்ளவர்கள் ஒவ்வொருவருக்கும் இது பொருந்தும். ஆனால் அவருடைய ஆவியை வெளிப்படுத்துபவர்கள் மாத்திரமே தேவனுடைய வாக்குத்தத்தத்தை விடாமல் பிடித்துக்கொண்டு, ஆசீர்வதித்தாலொழிய அவரைப் போகவிடாது, தேவனைஅவ்வளவாக அன்புகூருகிறவர்கள் மாத்திரமே, வாக்குத்தத்தத்தின் நிறைவேறுதலை அடைவார்கள். கிறிஸ்துவுடன் மகிமையில் ஆளுகைசெய்து, அவருடைய சிங்காசனத்தில் பங்கடைவார்கள்.

தேவதூதருடன் போராடிய இடத்தை, பெனியேல்(Peniel) – "தேவனுடைய முகம்" என்று பெயரிட்டழைத்து, தெய்வீகப் பராமரிப்பின் விசேஷித்த வெளிப்பாடுகளைக் குறியிட, யாக்கோபு ஒரு வழிமுறையைக் கையாண்டார். அங்கே கர்த்தரிடமிருந்து ஒரு குறிப்பிட்ட ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்ட பாக்கியமும், ஜெபத்திற்கு ஒரு குறிப்பிடத்தக்க பதிலும் அவருக்கு கிடைத்ததற்கான ஒரு நினைவூட்டலாக இது இருந்தது. இதேபோல், கர்த்தருடைய இரக்கங்களையும், நமக்கான பராமரிப்புக்களையும் நாம் சில விசேஷித்த முறையில் குறித்துக்கொள்வது, ஆவிக்குரிய இஸ்ரயேலுக்கு ஆதாயமளிக்கும். ஆசீர்வாதங்கள் கிடைக்கப்பட்ட சமயத்தில், தங்களுடைய இருதயங்களில் சரியான தாக்கத்தினை ஏற்படுத்தாமல், தவறவிட்டதாலேயே, பலரும் கர்த்தருடைய தயவையும் ஆசீர்வாதத்தையும் குறித்து ஏழ்மையாக உணருகிறார்கள். நாம் அனைவருமே ஓட்டைப் பாத்திரங்கள்; ஆக, கர்த்தருடைய இந்த தயவுகளின் விசேஷித்த குறிப்புகளை, நினைவுப்பலகைகளின் மீதோ அல்லது வேறு வழியிலோ குறித்து வைத்துக்கொள்ளாமலிருந்தால், அவற்றின் படிப்பினையையும், அவை கொடுக்கும் ஊக்கத்தையும் பலத்தையும் பெருமளவில் நாம் இழந்துவிடுவோம்.

நம்முடைய ஜெபங்களுக்கு அவர் அளித்த பதில்களில், நம்முடைய பிதாவின் உண்மையினிமித்தமாகவும், இந்த இரக்கங்களுக்கு ஈடாக கர்த்தருடன் சில உடன்படிக்கைகள் அல்லது பொருத்தனைகளுக்குள் நுழைந்ததின் நிமித்தமாகவும், சில வகையான நினைவுச்சின்னங்களை அமைக்கும் நடைமுறையைப் பின்பற்றினால் நம் அனைவருக்கும் அதிகமான "பெத்தேல்களும்", அதிகமான "பெனியேல்களும்" இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஒவ்வொருவரும் தன் மீதான நமது தேவனுடைய அன்பு மற்றும் விசேஷ கண்காணிப்பு பற்றிய புதிய ஆதாரங்களுக்காக அனுதினமும் கூர்ந்து நோக்குகையில், அத்தகைய குறியீடும் விழிப்புணர்வுமில்லாமல், நாம் அறிந்திருப்பதைக் காட்டிலும் ஊக்கத்திற்கும் ஸ்தோத்திரம் செலுத்துவதற்கும் நமக்கு அதிக காரணமிருப்பதைக் காண்போம். ஆகவே, நாம் நம் விசுவாசத்தையும், மகிழ்ச்சியையும், அன்பையும் அதிகரிக்க விரும்பினால், நாம் ஒவ்வொருவரும் தினந்தோறும், வாரந்தோறும், வருடந்தோறும் நம்முடைய "எபினேசர்களை"(Ebenezer - stone of help) தேவனிடம் உயர்த்துவோமாக!

———————

R 5481

# கீழ்ப்படிகிற பிள்ளைகளாக நம்மை வடிவமைத்தல்

## “FASHIONING OURSELVES AS OBEDIENT CHILDREN”

“நீங்கள் முன்னே உங்கள் அறியாமையினாலே கொண்டிருந்த இச்சைகளின்படி இனி நடவாமல், கீழ்ப்படிகிற பிள்ளைகளாயிருந்து, உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறதுபோல, நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள்'' – 1பேதுரு 1:14,15.

அப்போஸ்தலர் இங்கே உலகத்திற்கு முகவரியிட்டு எழுதாமல், தேவனுடைய பிள்ளைகளாக மாறியவர்களுக்கு, உலகின் சபிக்கப்பட்ட நிலையிலிருந்து விடுபட்டு, விலையேறப்பெற்ற இரத்தத்தின் மீதான விசுவாசத்தால் நீதிமானாக்கப்பட்டு, மாபெரும் பரிந்துபேசுபவராகிய இயேசுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவர்களுக்கே எழுதுகிறார். ஆனால் நாம் தேவனுடைய பிள்ளைகளாக மாறினால் மாத்திரம் போதாது, ஏனெனில் இந்தப் புதிதாக ஜெநிப்பிக்கப்பட்ட பிள்ளைகள் இடுக்கமான பாதையில் நடக்க இப்போதுதான் துவங்கியிருக்கிறார்கள். அவர்கள் அபூரணமான, வளர்ச்சியடையாத நிலையில் இருக்கிறார்கள். தங்களையே தேவனுடைய கரங்களில் ஒப்படைத்து, அவரது சித்தஞ்செய்ய நாடி, நீதியை விரும்பி அக்கிரமத்தை வெறுப்பவர்களாய் இருப்பதனால் அவர்கள் பிள்ளைகளாக இந்நிலைப்பாட்டைப் பெற்றிருக்கின்றனர்.

பாவத்திற்கும் சுயத்திற்கும் சாத்தானுக்கும் எதிராகப் போராட, நாம் இயேசுவின் கொடியின் கீழாக சேர்க்கப்பட்டு நாம் எடுத்த இந்நிலைப்பாட்டின் அடிப்படையில், நாம் அவருடைய நோக்கத்திற்காக நிச்சயிக்கப்பட்டபோது, எவ்வளவு முழுமையான ஊக்கத்துடன் இருந்தோமென்பதை நிரூபிக்க தேவன் விரும்புகிறார். உலகை ஆசீர்வதிக்கவிருக்கும் இயேசுவினுடைய மாபெரும் இராஜ்யத்தில் நாம் அவருடைய கூட்டாளிகளாகப் பொருந்தச் செய்வதற்கு தேவையான குணலட்சண வளர்ச்சியை நாம் அடையவேண்டும் என்று அவர் விரும்புகிறார்.

நாம் கீழ்ப்படிதலுள்ள பிள்ளைகளாக இருப்போமானால், சகலமும் நன்மைக்கேதுவாகவே நடக்கும். முறையான பரீட்சைகளும், முறையான செதுக்குதலும், மெருகூட்டலும் நம்மை “ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்திரத்தில் பங்கடைய'' தகுதியுள்ளவர்களாக்குவதற்கென உருவாக்கும் அனைத்தையும் நாம் பெற்றுக்கொள்வோம். ஆனால் நாம் கீழ்ப்படிதலுள்ளவர்களாக நம்மை நிரூபிக்கவில்லையென்றால், சிட்சிக்கப்பட்டு, இறுதியாக சரியான கீழ்ப்படிதலுக்கு கொண்டுவரப்படுகிற பிள்ளைகள் வகுப்பாரில் ஓரிடம் நாம் பெற்றிருந்தாலும்கூட, இது தெரிந்துகொள்ளப்பட்ட வகுப்பாராக ஆகாதபடிக்கு நம்மைத் தடைசெய்துவிடும்.

இதன்மூலம் தேவனுடைய பிள்ளைகள் எவராகிலும் ஒழுங்குமுறையிலிருந்து விலக்கு பெற்றிருக்கிறார்கள் என்பதாக நாம் குறிப்பிடவில்லை. ஏனென்றால் எந்தவொரு மகனும் சிட்சையைப் பெற்றுக்கொள்கிறார் என்று நமக்குக் கூறப்பட்டுள்ளது(எபி12:6–11). நம்முடைய கர்த்தராகிய இயேசுவுக்கு வந்த சிட்சைகள் தகுதியானவைகள் அல்ல. மாறாக அவை அவருடைய முழுமையான உண்மைத்தன்மையையும், உயர்த்தப்படுதலுக்கான தகுதியையும் நிரூபிக்க கொடுக்கப்பட்ட அனுபவங்களாகும். அவ்வாறே அவருடைய பின்னடியார்களுக்கு வரும் சிட்சைகள், எதிர்கால ஊழியத்திற்காக அவர்களைப் பொருந்தச்செய்வதற்காகவும், அவருடைய சரீர அங்கத்தினர்களாகக் கருதப்படுவதற்கான தகுதியை வெளிக்காட்டுவதற்காகவுமே வருகின்றன. பாவத்தின் தண்டனைகளுக்கான இயல்பையுடைய சிட்சைகள், தகுந்த நேரத்தில் முழுமையான இருதயத்தின் உண்மைத்தன்மை நிலையை கொண்டுவரவேண்டும். இல்லையேல் சிட்சிக்கப்பட்டவர், சரீரத்தில் தனக்குரிய இடத்தை இழந்துபோவார். இறுதியில் அவர் கீழ்ப்படியாதவர் என நிரூபிக்கப்பட்டால், அவர் தேவனுடைய எந்த தயவிற்கும் தகுதியற்றவராகக் கருதப்பட்டு, இரண்டாம் மரணத்தில் பங்கடைவார். ஆகையால் நமது ஆதார வசனப்பகுதியின் புத்திமதியானது மிகஉயரிய மேன்மையை அடைவதற்கும், பிதாவிடம் மிகஉயர்ந்த அளவில் உண்மைத்தன்மையாய் இருப்பதற்குமானதாகும்.

### நம்முடைய சிந்தைகளை எப்படி வடிவமைப்பது ?

நம்முடைய சிந்தைகளில் ஒரு வடிவமைப்பு மேம்பாடடைந்து வருகிறது. இது நம்முடைய சித்தத்தை வடிவமைப்பதைக் குறிக்கவில்லை. இந்தச் சித்தத்தைச் சரணடையச் செய்தாயிற்று. ஆனால் சிந்தையையும், சரீரத்தையும் ஒழுங்குபடுத்துவதில், சித்தத்திற்கு தொடர்பு இருக்கின்றது – இந்த வடிவமைப்பில் சித்தத்திற்குத் தொடர்பு இருக்கின்றது. தேவன் நமக்காகத் தீர்மானித்திருக்கும் சகல சோதனைகளாலும் நாம் முறையாக பயிற்சி பெறவேண்டுமென்பதற்காக நம்முடைய சிந்தைகள் கீழ்ப்படிதலுக்கு ஒத்த வழிகளில் கற்பிக்கப்பட வேண்டுமென்று நாம் சித்தங்கொள்ளவேண்டும்.

புதுசிருஷ்டிகளாக நாம் எதை சிந்திக்க தேவன் விரும்புவாரோ அதையே சிந்திக்கவும், புதுசிருஷ்டியைக் கட்டியெழுப்பும் சிந்தனைகளை பழக்கப்படுத்தி

வளர்த்திக்கொள்ளவும் நாம் கற்கவேண்டும். அவருடைய சித்தத்தின்படி நாம் புசிக்கவும், குடிக்கவும் வேண்டும். அவருடைய சித்தத்தின்படியே நமது ஆடை அணிதலும் ஒழுங்குபடுத்தப்படவேண்டும். மாம்சத்தின் பலவீனங்கள், எதிராளியின் தூண்டுதல்கள் மற்றும் நம்முடைய சூழல் ஆகியவற்றின் காரணமாக நம்முடைய ஜீவியத்தின் சகல விஷயங்களிலும் நாம் அவருடைய வழிகாட்டுதலை நாடிடவேண்டும். கர்த்தர் ஏற்பாடுகளைச் செய்துகொடுத்திருக்கிறார். வேதாகமத்தில் உறுதியான அறிவுரைகளைக் கொடுத்துமிருக்கிறார். அதன்மூலம் நாம் அவருடைய வார்த்தைக்கு இசைவாக நம்முடைய ஜீவியத்தை ஒழுங்குபடுத்திக்கொள்ள முடியும். மேலும் நாம் மேன்மேலும் தேவனுடைய சித்தத்தை அறிந்துகொள்ளவும், அவருடைய பராமரிப்பினால் நம்முடைய ஜீவியங்களில் ஆதாயமடையவும், பெற்றுக்கொண்ட அறிவைப் பயன்படுத்தவும் நாடிடவேண்டும். இவ்வாறாக நாம் புசித்தாலும், குடித்தாலும், உறங்கினாலும், உழைத்தாலும், அனைத்தையும் தேவனுடைய மகிமைக்கென்றே செய்பவர்களாய் இருப்போம்.

நம்முடைய மாம்சத்தின் உயிரமைப்பை மரபுவழியாய்ப் பெற்றிருக்கிறோம். நம்முடைய இந்த சரீரங்கள் பல்வேறு பலவீனங்களையும்– சிலது ஒரு திசையிலும், சிலது மற்ற திசைகளிலும் முரண்பாடுகளையும் கொண்டிருக்கின்றன. ஆனால் அவை அனைத்துமே ஏறக்குறைய தேவன் முதலில் கொடுத்த உண்மையான பரிபூரணத்தின் சீர்கெட்ட நிலையினால் ஏற்பட்டவைகளே ஆகும். பல நூற்றாண்டுகளின் பாவமானது நம் மீதும், நம்முடைய சிந்தைகள் மீதும், சரீரத்தின் மீதும் தனது அடையாளங்களை விட்டுச்சென்றிருக்கின்றன. மேலும் இந்த அடையாளங்களானது நம்முடைய சிந்தைகளில் கோட்பாடுகளாகக் காணப்படுகிறது. கடந்த காலங்களின் இந்தத் தப்பறைகளானது நம்மை கட்டுப்படுத்தியிருக்கின்றன.

நாம் கர்த்தருடைய வழியைப் பார்ப்பதற்கு முன்னதாக, பூமிக்குரிய இன்பங்களையும், நாட்டங்களையும் பின்பற்றி, சுயத்திற்கு முதலிடம் கொடுப்பது சரிதான் என்று நாம் எண்ணியிருந்தோம். இதுதான் நாம் பின்தொடரவேண்டிய சரியான போக்கென நாம் சுபாவத்தின்படி கூறினோம். முக்கியமானவர்களும் பெரியவர்களும் இந்தப் போக்கைப் பின்பற்றுகிறவர்களாக – மனிதர்களின் பாராட்டையும், தாங்கள் எவ்வளவு நேர்த்தியாக ஆடை அணிந்தும் வீடுகட்டியும் இருக்கமுடியும், பாரம் ஏற்றும் வண்டி அல்லது நான்கு சக்கர ஊர்தியை எவ்வளவு நன்றாக வைத்திருக்கமுடியும் – போன்ற இந்த தற்கால ஜீவியத்தின் நடவடிக்கைகளை முதலில் தேடுகிறவர்களாக இருப்பதைக் காண்கிறோம். பூமிக்குரிய காரியங்களின் மீதான தாகத்தைத் திருப்திப்படுத்த அவர்கள் நாடி, அவர்களது சிந்தையைத் திருப்திப்படுத்துவதற்காக பல்வேறு வகையான இலக்கியங்களையும் அல்லது சரீரத்தைத் திருப்திப்படுத்துவதற்காக சில வகையான உணவுகள் அல்லது பானங்கள் முதலியவற்றையும் நாடி, அதிகளவில் அதனை அடைந்திருக்கின்றனர்.

ஆனால் நாம் எதனைப் புசிக்கவேண்டும், அல்லது குடிக்கவேண்டும் அல்லது அணியவேண்டும் என்பது தொடர்பாக, புகையிலை உபயோகிப்பது தொடர்பாக, நாம் பெற்றுள்ள ஆதாரங்களைக் கொண்டு, பொருளாதார ரீதியில் எப்படி நம்மை வரைமுறைக்குட்படுத்துவது தொடர்பாக தேவனுடைய சித்தமென்ன ? என்று நாம் தேவனுடைய பிள்ளைகளாகும்போது கேட்கத் துவங்குகிறோம். நாம் திரையரங்கிற்கு செல்லலாமா ? அல்லது சீட்டு விளையாடலாமா அல்லது நடனமாடலாமா என்பதையெல்லாம் இப்போது நாம் முடிவு செய்யமுடியாது. இந்த விஷயங்கள் அனைத்தும் நம்மை நாம் பிரதிஷ்டை செய்வதற்கு முன்பே முடிவு செய்திருக்க வேண்டும். இப்போது நாம் கிறிஸ்துவுடன் செய்துகொண்ட உடன்படிக்கைக்கு இசைவாக, நாம் பிதாவின் சித்தத்தை கண்டிப்பாக அறிந்துகொள்ள வேண்டும். தேவனுடைய நிலைப்பாட்டிலிருந்து விஷயங்களைப் பார்க்கக் கற்றுக்கொள்ளத் துவங்கும்போது, நாம் எதைப் புசிப்போம், எதைக் குடிப்போம் போன்றவற்றைப் பற்றிய எண்ணங்களை மாற்றிக்கொள்கிறோம். இவ்வாறு நம்முடைய சிந்தையில் தொடர்ச்சியாக நடக்கும் இந்த மாற்றமே வடிவமைத்தல் ஆகும்.

### வடிவமைத்தல் ஒரு படிப்படியான செயல்முறை

நாம் சில விஷயங்களை மிக விரைவாகக் கண்டடைந்தாலும், சகலத்தையும் ஒரே சமயத்தில் கற்றுக்கொள்வதில்லை. சில விஷயங்கள் மற்றவற்றைக் காட்டிலும் நம்முடைய சிந்தைக்கு முன்னால் குறைவாகவே புலப்படும். மற்றும் அவைகள் ஒரு புதுசிருஷ்டிக்கு எது சரியாக இருக்கும் என்பதற்கான நேர்த்தியான நிழல்களைக் குறிக்கின்றன. இந்த விஷயங்களை மேன்மேலும் கவனிக்கத் துவங்குவோம். மேலும் எந்தெந்த விஷயங்களை நாம் தொடர்ந்து தேர்வு செய்ய வேண்டும் ? என்று கேட்போம். தேவ சித்தத்தைப் பற்றிய அறிவானது கல்வி சார்ந்த விஷயமாகும். இது சரி, அது தவறு என்று காணும் நிலைக்கு வருகிறோம். (மாலை நேர உடைக்கு ஒரு பாணியையும், காலை நேர உடைக்கு ஒரு பாணியையும் உலகம் ஏற்படுத்திக்கொள்கிறது). நாம் கிறிஸ்தவர்களாக ஆகும்போது, நமக்குப் புதிய தரநிலைகளும் கிடைக்கின்றன. இதனுடன் சகலத்தையும் இசைவாகக் கொண்டுவருவதற்கு சிறிது காலம் எடுக்கும்.

இந்த சிந்தனைக்கேற்ப, அப்போஸ்தலரும், புதிய சித்தம் புதிதாகுகிறதினால் அல்ல, மாறாக, ‘‘உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்’’ என்கிறார். நாம்

ஏற்கனவே புதிய சித்தத்தைப் பெற்றிருக்கிறோம். ஆனால் சரீரமானது சிந்தையால் கட்டுப்படுத்தப்படுவதாகக் காண்கிறோம். எனவே புதிய சித்தமானது இவ்வாறு கூறத்துவங்கும் ; "நான் சிந்தையிலிருந்து துவங்கவேண்டும். தேவ சித்தத்தின்படி விஷயங்களைச் சரியாக காணும்படி என்னுடைய சிந்தையைப் பயிற்றுவிக்கவேண்டும். நான் வேதாகமத்தையும் தேவனுடைய சிந்தையைப் பற்றிய அறிவைக் கொடுக்கும் அனைத்து தெய்வாதீனமான அடையாளங்களையும் பயன்படுத்தி, அதன்படி நான் என்னுடைய மனதை இணக்கமாக்கத் துவங்குவேன்"என்று கூறும். இவ்வாறு நம்முடைய சிந்தை படிப்படியாக வடிவமைக்கப்படுகிறது. கர்த்தருடைய சிந்தைக்கு மறுரூபமடைகின்றது. தேவசித்தம் என்ன என்பதை நாம் மேன்மேலும் காணும்நிலையை அடையும்போது, நம்முடைய சிந்தை அவருடைய சித்தத்தையே செய்யத் தீர்மானிக்கும். நம்முடைய பகுத்தறிவு ஒரு முக்கிய பங்கு வகிக்கின்றது.

இவ்வாறு நாம் வேறெந்த வழியைக் காட்டிலும், சிறப்பாக வளர்ந்திருக்கிறோம் என்பதால், தேவன் நம்முடைய பகுத்தறிவிடம் முறையிடும்படி விரும்புகிறார். நாமனைவரும் கிறிஸ்துவின் பள்ளியில், நம் கர்த்தரின் பாதுகாப்பின்கீழ் இருக்கிறோம். இந்தப் பள்ளியில்அவருடைய சித்தத்தைச் செய்யக் கற்றுக்கொள்கிறோம். நம்முடைய கர்த்தராகிய இயேசுவின் போதனைகளையும் அப்போஸ்தலர்களின் எழுத்துக்களையும் நாம் பெற்றிருக்கிறோம். மேலும் பூலோகத்திலே அப்போஸ்தலர்கள் கட்டுகிறது எதுவோ அது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும், பூலோகத்திலே அப்போஸ்தலர்கள் கட்டவிழ்ப்பது எதுவோ அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும் என்று நமது கர்த்தரே அறிவித்திருக்கிறார். நமது கல்வி இந்த ஜீவியத்தின் இறுதிவரை தொடர்ந்து முன்னேறிக் கொண்டுசெல்லும். கீழ்ப்படிதலுள்ள பிள்ளைகளே இப்பள்ளியின் பாடங்களை முழுமையாகக் கற்றுக்கொண்டவர்களாக இருப்பார்கள். தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, அவர்களின் மனம் புதிதாகிறதினாலே இவர்கள் மறுரூபமாக்கப்பட்டிருப்பார்கள் – ரோமர் **12:1,2.**

### யேகோவா தேவனுடைய நீதியே நம்முடைய தரநிலை

உண்மையில், புதிய சித்தமென்பது, பரத்திலிருக்கும் நம்முடைய பரமபிதாவைப் போன்றிருக்கவேண்டும் என்கிற விருப்பமாகும். அப்போஸ்தலர் பேதுரு; "உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறதுபோல, நீங்கள் ... பரிசுத்தராயிருங்கள்" என்று அறிவுறுத்துகிறார். பரிசுத்தமே பரிபூரணத்தின் தரநிலையாகும். நாம் முதலில் தேவனுடன் உடன்படிக்கை செய்யும்போது நமது சித்தம் பரிசுத்தமாக இருக்கவேண்டும். பரிசுத்த சித்தத்திற்குக் குறைவான எதுவுமே அவருக்குப் பிரியமானதாயிராது. நாம் ஒரு பரிசுத்தமற்ற சித்தத்தை தேவனுக்கு அடிபணியாத சித்தத்தை பெற்றிருந்தோமானால் நாம் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்க மாட்டோம். எனவே, நமது சித்தம் பரிசுத்தமாக இருக்கும் பட்சத்தில், நம்மால் இயன்றளவிற்கு அவருடைய சித்தத்தைச் செய்வோராயிருப்போம்.

நம்மை அழைத்தவர் பரிசுத்தராயிருப்பதால், நம்முடைய சித்தத்தைப் பொறுத்தவரையில், நாமும் பரிசுத்தமாக இருப்போம். முடிந்தவரை ஜீவியத்தில் பரிசுத்தமாக இருக்கும்படி, நம்முடைய சிந்தையை நாம் வழிநடத்துவோம். ஜீவியத்தின் ஒவ்வொரு நடவடிக்கையிலும் தேவனுடைய பரிசுத்தத்தின் கொள்கைகளைப் பொருந்தச் செய்வோம். பிறர் நமக்கு என்ன செய்யவேண்டுமென்று விரும்புகிறோமோ அதை நாமும் மற்றவர்களுக்குச் செய்ய வேண்டுமென்கிற ராஜரீகப் பிரமாணத்தைக் கடைப்பிடிப்போம். பரிசுத்தத்தின் இந்தக் கொள்கைகளை தனது சொந்த ஜீவியத்தில் பயன்படுத்துவதைப் புறக்கணிப்பவர், புதிய ஜீவியத்தில் வளர்ச்சிபெறவில்லை, மறுரூபமாகவில்லை என்பதே அர்த்தமாகும். தேவ சிந்தைக்கு முழு இசைவாக நம்முடைய சிந்தைகளைப் பெற்றிருக்கவும், முடிந்தவரை நமது நடத்தையும் சீராயிருக்கும்படியாக நாம் முயற்சிக்கவேண்டும்.

நம்முடைய சிந்தை சரியான வழித்தடத்தில் இயங்கவில்லையென்றால், நாம் அதை சரியான தடத்திற்கு திருப்புவதற்கு ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். நம்மால் இயன்றவரை கர்த்தரின் சித்தம் என்ன என்பதைப் பற்றிய நம்முடைய உயரிய கருத்தாக்கத்திற்குக் கீழ்ப்படிய வேண்டும். சிந்தையையும், சரீரத்தையும், நாவையும், நம் நடத்தை தொடர்பான அனைத்தையும் கண்காணிக்க எந்தளவிற்கு நம்முடைய சித்தம் விழிப்புடன் இருக்கிறதோ, அந்தளவிற்கு நம்முடைய சித்தமானது உண்மைத்தன்மையோடு இருக்கிறது என்பது தேவனால் தீர்மானிக்கப்படும்.

"உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள்" என்று அப்போஸ்தலர் நமக்கு அறிவுறுத்துகின்றார் **(1பேதுரு 1:15).** இங்கு நடக்கைகள் என்ற பதத்திற்குப் பரந்த அர்த்தம் உள்ளது. இது மற்றவர்களுடனான நமது தொடர்புகள் – மற்றவர்கள் தொடர்பான நம்முடைய சகல நடத்தை – நம்முடைய ஜீவிய முறை ஆகியவற்றோடு தொடர்புடையதாகும். நம்முடைய எண்ணங்கள், வார்த்தைகள் மற்றும் செயல்கள் போன்ற நம்முடைய ஜீவியங்கள் தொடர்பான அனைத்திலும் நாம் பரிசுத்தமாக இருக்கவேண்டும். இது மிக உயரிய தரநிலையாகும். மேலும் கர்த்தர் இத்தகைய ஓர் உயரிய தரநிலையை அமைத்ததில் ஆச்சரியமேதுமில்லை! இந்தத் தரநிலை என்ன என்பதை நாம் கற்றுக்கொள்வதும், அதை மற்றவர்கள் அறிய உதவுவதும் நம்மைச் சார்ந்தவையாகும்.

இதனால்தான், நம்முடைய இருதயங்களை இயேசுவிடம் கொடுத்தபின், திரைக்கு இப்பக்கம் சில வருடங்கள் நாம் செலவிடவேண்டியிருக்கிறது. இயேசுவைப் பின்பற்றுவதற்காக நாம் சிலுவையை எடுத்தோம் என்று நாம் கூறுகிறோம், கர்த்தரோ இது உண்மையா என்பதை நிரூபிக்க விரும்புகிறார்! அவர் நமது நடைமுறையை கண்ணோக்கிக் கொண்டிருக்கிறார். மணவாட்டி வகுப்பாருக்காக முன்னறிவிக்கப்பட்ட இலக்கமானது பூர்த்தி செய்யப்படும். மற்றவர்களுக்கு, இந்தளவிற்கு நல்லதாயிராத வேறு ஸ்தானம் வழங்கப்படும். மேலும் கீழ்ப்படிதலின் உண்மையான ஆவி தங்களிடமில்லை என்பதை வெளிப்படுத்துபவர்கள் இரண்டாம் மரணத்தில் பங்கடைவார்கள்.

——————